PROGRESS OF RESEARCH TOPICS IN TAMIL NADU ARCHIVES DURING THE PERIOD FROM 1st OCTOBER, 1990 TO 5th NOVEMBER 1990.

Serial number. (1)	*Name.* (2)	*Subject.* (3)	*Date of enrolment*
1	Selvi T. Jeyanthi, M.A.	Dr. Muthulakshmi Reddies role inemancipation of Women 1920-1959	1st October 1990.
2	Thiru S. Kumarasamy, M. Phil	Prohibition Policy of D.M.K. Government, 1967-1977	Do.
3	Thiru M. Jagadeesan, Project work	Law and Order in Madras Presidency 1920-1950	5th October 1990.
4	Thiru S. Elankumaran, Project work	Siddha in Veterinary Medicine	Do.
5	Thirumathi Sudha Jhanee Iyer, M.Phil.	The Self Respect Movement 1925-1937	1st October 1990.
6	Thiru V. Yesu Bakthan, Ph.D.	Labour Problems in Tamil Nadu 1900-1957	3rd October 1990.
7	Thiru P. Sermakani, Ph.D.	Depressed classes and National Movement in Tamil Nadu 1885-1947 20-ம் நூற்றாண்டு சிற்றிலக்கியங்களில் உலா	10th October 1990.
8	Selvi G. Nagaveni, M.Phil.		11th October 1990.
9	Thiru Harikrishan Singh, Project work	History of Pharmacy 1801-1959	11th October 1990.
10	Selvi R. Meera, Project work	Socio Economic Study of Kodikkarai and Kodikadu Villages 1800-1859	Do.
11	Selvi S. Latha, M.Phil.	Development of Legal Rights of Hindu Women, 1830-1959	10th October 1990.
12	Thiru N. Suresh Babu, M.Phil.	Christianity and Social Change in Coastel Andhra 1800-1920	11th October 1990.
13	Thiru Alex Matheu, M.Phil.	Kerala Church 1804-1959	11th October 1990.
14	Thiru R. Venkatesh, Ph.D.	Socio Economic Development and Education in South India 1850-1958	11th October 1990-
15	Thirumathi Asha Latha Augustine, Ph.D.	Status of Christian Women in Tamil Nadu 1800-1920	11th October 1990.
16	Thiru A. Palanisamy, Ph.D.	Education in Tamil Nadu 1800-1952	15th October 1990.
17	Thiru M. Govindarajan, Publish a Book	Freedom Movement in South India 1700-1959	4th October 1990.
18	Thiru Osamu Note, Ph.D.	To study the Historical Development of Handloom Industry in Tamil Nadu 1900-1960.	16th October 1990.
19	Thiru V. R. Muralidaran, Project work	History of Science and Technology in Madras Presidency 1800-1950	22nd October 1990.
20	Thiru S. Harikrishna, M.Phil.	Telugu Journalisam 1870-1920	19th October 1990.
21	Thirumathi Ruby Mathe, Ph.D.	Social History of Cochin, 1900-1947	22nd October 1990.

22	Selvi Gowri Viswanathan, Ph.D.	Conversion and the Colonial experience 1830-1880	24th October 1990.
23	Thiru S. Jayaraman, Ph.D.	Land Tenure in the Madras Presidency 1765-1820	16th October 1990.
24	Thiru N. Shyam Bhat, Project work	Judiciary and Police in early Colonical South Kanara 1799-1862	29th October 1990.
25	Thirumathi Shantha Ramasamy, Project Work (I.C.H.R.)	Towards Freedom 1940-1945	29th October 1990.
26	Thirumathi Beulah Herbert, M.Th.	Tanjai Marathi Kings and Vedanarayanam Sastriar 1775-1875	29th October 1990.
27	Selvi Radhika Natarajan, Ph.D.	Coromandel Coast 1672-1740	29th October 1990.
28	Thiru Sebastian Joseph, M.Phil.	Abolication of Raja Ramavarma of Cochin 1895-1914	29th October 1990.
29	Thiru S. Kumaravel, Ph.D.	Political Parties in Tamil Nadu 1885-1956	24th October 1990.
30	Selvi C. Premalatha, M.Phil.	Maramakkathayam System in Malabar 1670-1959	30th October 1990.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 1—10—1990 முதல் 31—12—1990 வரை நூலகத்தில் பெறப்பட்ட மற்றும் விலைக்கு வாங்கப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்.

(1)	(2)	(3)
1	S. Subbulakshmi	Government Hospital for Women and Children, Egmore, Madras—A study. (Thesis).
2	மாவட்ட நூலக அலுவலகம், கோவை..	வளரும் நூலக இயக்கம்.
3	,,	கோவை மாவட்ட நூலக வளர்ச்சி மாநாடு சிறப்பு மலர்.
4	Director of Archives, Government of Punjab.	Annual administration Report of the Punjab State Archives 1985—86.
5	N. Shyam Bhat	South Kanara : 1799—1860 (Thesis).
6	மதுரை மாவட்ட நூலக ஆணைக் குழு	மதுரை மாவட்ட நூலக வளர்ச்சி மாநாடு மலர்.
7	British Library, London	Annual Report 1988—89 : India Office Library and Records.
	Department of Statistics Tamil Nadu ..	Season and Crop Report of Tamil Nadu 1986-87.
0	Maharashtra State Government ..	Satara and Prarbhani District Gazetteers (Supplement).
10	V. Gomathy	Agrarian economy in Tiruchirappalli District 1800 A.D.—1850 A.D. (Thesis).
11	காமராஜர் மாவட்ட நூலக ஆணைக் குழு.	நூலக வளர்ச்சி மாநாடு மலர்
12	P. Martin Lourdu	Communal riots in Tiruchirappalli District 1900-1947—A case study.
13	குரும்பூர் குப்புசாமி	தென்பாண்டிச்சீமை
14	அ. அய்யூப்	வீடுகட்டப் பணம் வேண்டுமா?
15	,,	வெளிநாட்டுக்குப் போவது எப்படி?
16	குரும்பூர் குப்புசாமி	அமரர் ஆதித்தனாருக்கு அஞ்சலி
17	அ. ம. சாமி	தமிழ் இதழ்கள்: தோற்றம், வளர்ச்சி
18		அருள்மிகு உலகம்மன் காசிவிஸ்வநாதசாமி திருக்கோயில் இராசகோபுர குடமுழுக்கு விழா மலர்.
19		நெல்லை மாலை முரசு வெள்ளிவிழா மலர் 1984
20		ராணி வெள்ளிவிழா மலர் 1987
21	British Records Association, England	Archives—Journal of the British Record Association, October 1990.
22	Do.	57th Report 1988—89 1990.
23	Mauritius Government	Annual Report of the Archives Department for the year 1988.
24	Government of Tamil Nadu	History of services of Gazetted Officers in the Civil Department serving in Tamil Nadu State corrected upto 31st March 1985 Public Works (Highways) Department Volume-6, 1989.

(1)	(2)	(3)
25	Government of TamilNadu	History of services—Gazetted Officers in the Civil Department serving in Tamil Nadu Drawing more than 1800—Corrected upto 31st March 1985—Vol. IV.
26	P. Rajeswari	Status of employed women at Komarapalayam 1989 (Thesis).
27	K. Surya Prakash Reddy	Famines in Andhra (1800-1850) with special reference to Guntur famine of 1833 (Thesis).
28	K. N. Shanmugam	Nationalism and Indian National Congress in Thanjavur District. A historical study (Thesis).
29	Dr. K. Bose	Forward Block
30	T. N. Electricity Board	Statistics at a glance 1989-90.
31	டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்	புதிதும் பழையதும் 1990
32	,,	நான் கண்டதும் கேட்டதும் 1980
33	,,	என் சரித்திரம் 1982
34	பெரியார் மாவட்ட நூலக ஆணைக்குழு	வளரும் நூலக இயக்கம் 1985
35	பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் இயக்குநர், சென்னை-6.	National Literary Mission Tamil Nadu : one step forward 1988-89.
36	,,	செய்திக்கதிர்.
37	,,	Adult Education in Action.
38	,,	Technology Mission on Literacy.
	Newly purchased books :	
39	Gupta (B.M.)	Hand book of Libraries, Archives and Information Centres in India Vol. I—Libraries and Archives.
40	Do.	Hand book of Libraries, Archives and Information centres in India Volume II Libraries and Archives.
41	Reddy	The Thirumalavadi temple.
42	Rao	Rural Industrialisation in India.
43	Rao	Social Movements and social transformation
44	Manickam	Ecological studies on the Fern flora of the Palni Hills (South India).
45	I.L.O. New Delhi	Equality of opportunity and treatment for women workers.
46	Do.	Employment of Women with family responsibilities.
47	Do.	Conditions of work, vocational training and employment of women.

(1)	(2)	(3)
48	I. L. O., New Delhi	Equal opportunities and equal treatment for men and women workers.
49	Do.	Rural Development.
50	Do.	Household Income and expenditure statistics No. 2.
51	Do.	Household Income and expenditure statistics No. 3.
52	Bharatiya Vidya Bhavan, Bombay	The history and culture of Indian people volume 6, Delhi Sultanate.
53	Do.	The history and culture of Indian people Volume 8—The Maratha Supremacy.
54	Robinson	Local Politics.
55	Attwood	Who shares? Co-operation and Rural Development.
56	Low	Indian National Congress.
57	Sisson	Congress and Indian Nationalism.
58	Krishnamurthy (J)	Women in Colonial India.
59	Augustine	Strategies for the third world development.
60	Rodgers	Population growth and poverty in rural South Asia.
61	Mahajan	Women's contribution to India's economic and social development.
62	Kumari	Women headed house hold in rural India.
63	Singh (Sewa)	A Practical manual of colon classificationed.
64	Venkateswara	Dynamics of green revolution in India.
65	Wignaraja	The challenge in South Asia.
66	Arputhamurthy (Savitri)	Women work and discrimination.
67	—	Hand book of Libraries Archives and Information centres Vol. 8.
68	Pandey	Women in India Past and Present.
69	Do.	Breast feeding and the working women in India.
70	Agarwal	Women in rural society.

LIST OF TAMIL NADU ARCHIVES PUBLICATIONS AVAILABLE FOR SALE.

Serial number.	*Name of the book with description.*	*Year.*	*Rate.*
(1)	(2)	(3)	(4)
			Rs.
1	Diary and Consultations	1681	0—87
2	Do.	1686	1—37
3	Do.	1687	2—00
4	Do.	1688	2—00
5	Do.	1689	1—60
6	Do.	1692	0—87
7	Public Consultations Volume 71	1741	2—00
8	Despatches from England	1680—82	1—12
9	Do.	1681—86	2—00
10	Public despatches to England Volume 13	1741—42	1—60
11	Letters from Fort St. George	1679	1—00
12	Do.	1689	0—87
13	Do.	1690	2—00
14	Letters to Fort St. George Volume 11	1682	2—00
15	Letters to Fort St. George Volume 25	1740	0—75
16	Letters to Fort St. George Volume 27	1741	1—50
	Subject :		
17	Letters to subordinate Factories	1680—81	1—00
18	French Correspondence Book No. 9	1752	1—37
	Military Department.		
19	Diary and Consultations	1752	1—12
20	Country Correspondence	1753	2—00
21	Diary and Consultations	1754	2—00
22	Do.	1750	2—00
23	Country Correspondence	1754	2—00
24	Do.	1755	0—87
25	Do.	1756	1—75
26	Do.	1757	2—00

Serial number.	Name of the book with description.	Year.	Rate.
(1)	(2)	(3)	(4)
			Rs. P.
27	Country Correspondence	1758	1—87
	Mayor's Court Records:		
28	Minutes of proceedings	1689—1719	1—12
	Factory Records:		
29	Selections from public consultations letters from Fort St. George and Fort St. David consultations.	1740	1—12
30	Selections from Fort St. David consultations	1741	0—52
31	Masulipatnam consultation Book	1682—1683	0—87
	Dutch		
32	Memoir on the Malabar Coast Volume I		0—56
33	Memoir written in the year 1781 AD by Adriaan Menons No. 2.		2—00
34	Memoir of Commander Fredrick Gunes delivered to his successor Casper Decong on 31st December 1956 copies by the Year of Groect. Lr. No. in the press list 555 No. 2.		0—62
35	Memoir of Johan Gerard Van Angelbec ordinary Member of Dutch India and Governor Evot of Ceylon delivered to his successor in the Administration of Malabar, can Lambertus Van Shall in the year 1793—copies by the Rev. Groot Lr. No. in the press list 1423 No. 4.		0—57
36	Misterical account of Nawab Hyder Ali Khan (from the year 1763. Numbers in the press list 720 Volume 5.		0—50
37	List of Dutch Manuscripts, letters and official documents copied by the Rev. Lt. Groot (Member in press list, 1629 Volume 6.		0—62
38	Memoir of the departing Commander Cornebes breakpet delivered to his successor the worshipful Urulas Governor and Director Elect. Christian Lodenijk Senff on the last day of February 1769. Number is press list, 855, Volume 7.		0—75
39	Diary Kept during the expedition against the Zamorin from 4th December 1716 to 25th April 1717 copied by Rev.P.Groot (Number in press list, 97, 98 and 99) Volume 8.		2—00
40	Extracts from General inventories and establishments of the year 1743, 1761 and 1780—copied by the Rev. P. Groot (Number in press list, 358, 674 and 1136) Volume 9.		0—62
41	Diary of captain Lackort written during the campaign against the King of Travancore from 18th October 1739 to 8th June 1740. (Number in Press List 2879, Volume 10.		0—50
42	Memoir of casper De Jong delivered to his successor Gede-fredus Veiserman dated 7th March 1761—copied by Rev. P. Groot, Volume II (Number in press list 6739).		0—75

Serial Number.	Name of the book with description.	Year.	Rate.
(1)	(2)	(3)	(4)
			RS. P.
43	Memoir of Commander Godefridus Fisegrman delivered to his successor Cornebi eree Kept on the 22nd February 1765 copied by the Rev. P. Groot, Volume 12. (Number in presslist 772).		0—87
44	Memoir written in the year 1677 AD by Kendrik Adriaan Van Kheade, Commander of the Malabar Kanara and wingurla Coast, for his successor, Volume 11.		0—75
45	Letters from Nagapatinam 1748—50 and 1757—58 by the the Rev. P. Groot (Number in press list, 471 and 6139 Volume 15).		2—00
	General ;		
46	Maalbar District Gazetter Volume I 1839 (Reprinted in 1951).		5—00
47	Malabar district Gazetter Volume 2 1933 (Reprinted in 1951).		4—50
	Saleable copies of Madras District (*old Gazetteers and Manuals available*) in Madras State Archives.		
48	Chingleput Volume II Statistical Appendix	1928	1—50
49	Chingleput Volume III Statistical Appendix	1933	1—25
50	Coimbatore Volume II Statistical Appendix and supplement to the revised District Manuals (1898 for Coimbatore District).	1933	4—25
51	Ganjan—Volume II Statistical Appendix	1930	1—62
52	Ganjan—Volume III Statistical Appendix	1934	1—75
53	Madurai Volume III Statistical Appendix	1930	2—62
54	Madurai Volume III Statistical Appendix	1935	1—62
55	North Arcot Vlolume II Statistical Appendix	1929	2—00
56	North Arcot Volume III Statistical Appendix	1933	1—75
57	Nilgiris Volume II Statistical Appendix	1928	2—09
58	Ramanathapuram Volume III Statistical Appendix ..	1933	1—50
59	Ramanad Volume II Statistical Appendix	1929	1—50
60	South Arcot Volume II Statistical Appendix	1932	3—12
61	Salem Volume II Statiscal Appendix	1932	3—32
62	Tinnevell Volume II Statistical Appendix together with a supplement to the District Gazetteer 1917 for Tirunelveli.	1934	4—62
63	Tanjore Volume II Statistical Appendix together with supplement to the District Gazetteer (1906 for Tanjore District.	1933	4—50
64	Tiruchinopoly Volume II Statistical Appendix 1931 ..	1931	2—75
65	Tiruchinopoly Volume III Statistical Appendix 1933 ..	1933	1—30
66	Studies in Madras Administration Volume I		13—15
67	Studies in Madras Administration Volume II		12—80
68	Avana Amudham Quarterly Journal		3—00

தமிழ்ப் பகுதி

யுகப் புருஷர் வங்கச் சிங்கம் சுபாஷ்சந்திரபோஸ் வாழ்க்கைக் கதை

எம். எஸ். பாண்டியன்,
ஆராய்ச்சி உதவியாளர்,
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்,
சென்னை-8.

முன்னுரை :

தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாற்றில் சுபாஷ்சந்திரபோஸிற்கு ஒரு முக்கிய இடமுண்டு. ஒரு தேசியத் தலைவனுக்குரிய அனைத்து இலக்கணமும் பொருந்திய ஒரு வீர மிகுந்த தலைவர் அவர். அவர் வாழ்ந்த காலத்தில் அவரது அடிப்படை சமூக உள்ளடக்கமும் சில தனிப்பட்ட அரசியல் எழுச்சிகளுமே அவரை அந்நிலைக்கு உயர்த்திய காரணங்களில் மேலானவையாகும். போஸ் தமது நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் உலக அரங்குகளிலும் பேசப்பட்ட எழுச்சி மிகுந்தலைவர். பல சந்தர்ப்பங்களில் அரசியல் உலகம் அவரது நடைமுறைகளைப் பின்பற்றத் தவறவில்லை. இத்தகைய தலைவரின் வழிகாட்டல் முறைகளைப் பின்பற்றி எத்தனையோ இளைஞர் இன்று அரசியல் வியூகம் வகுத்து நிற்பதைக் காண்கின்றோம். அவர் காலத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்ட புரட்சி நடவடிக்கைகள் எதுவும் வீண்போனதில்லை. அவற்றின் விளைவே இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம். அவர் எந்த அபாயமான அரசியலையும் மக்களுக்கு உணர்த்தவில்லை. ஆனால் செயல் இழந்திருந்த இந்திய நாட்டின் தீர்க்க தரிசனத்தை வேறு ஒரு விட்டத்திலிருந்து தனித்துச் செயல்பட்டார். இனம், மதம், மொழி, ஏழை, பணக்காரன் என்ற பிரிவினைகளுக்கு அவர் அப்பாற்பட்டுத் திகழ்ந்தார். இவரது வாழ்க்கை அனுபவங்களை நாம் கற்றுணர்வதின் மூலம் நாட்டில் நிகழும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்கு சாதகமாக விழிப்புணர்வோடு செயல்பட முடியும். இம்மா பெரும் தலைவரது வாழ்க்கையின் இறுதிக்கட்டம் ஒரு சோக முடிவுதான். ஏன் காந்தியடிகளும் இதே போன்ற சோக முடிவைத்தான் பெற்றார். நேரு, காந்தி ஆகிய தலைவர்களின் வரிசையில் இடம் பெறும் போஸின் வாழ்க்கை ஒரு வீரவரலாறு ஆகும்.

சுபாஷ் போஸ் அவர்கள்தான் காந்தியடிகளை இந்தியாவின் தந்தை (Father of the Nation) என்று முதலில்அழைத்தார்.[1] அதனை முன்விட்டு ஒரு தேசியக்கொடி, ஒரு தேசியப் பாடல்ஒரு தேசியச் சின்னம் முதலானவைகள் நம்மிடையே உருவாகக் காரணமாயிருந்தது. "ஜெய்ஹிந்த்" என்று சொல்கிறோமே அந்த தாரக மந்திரமும் அவர் உதிர்ந்த பொன் மொழியாகும். அவரது வாழ்நாளே அதிசயந்தக்க நிகழ்ச்சிகளால் நிரப்பப்பட்டது என்று கூறுவார்கள்.

பிறப்பு :

போஸ் 23-1-1897-ல் கட்டாக்கில் பிறந்தார். தந்தையார்[1] ஜானகிநாதபோஸ் தாயார் - பிரபாபாய்தத். இவர் ஒன்பதாவது குழந்தையாகவும் ஆறாவது மகனாகவும் அவர் தம் அருமைப் பெற்றோருக்குப் பிறந்தார். இவர்கள் மூதாதையர் ஜாகீர்தார்கள். இவரது தந்தை ஒரு வழக்கறிஞராவார். பின்னர் அவர் வங்க சட்டமன்றத்தில் உறுப்பினராவார். அரசியலில் அவர் முழு ஈடுபாடு கொண்டவரில்லை என்றாலும் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளுக்குச் செல்வார். சுதேசி மனப்பான்மை கொண்டவர்.

இளமைக்காலம் :

சுபாஷ் இளமைக் காலத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் பத்தோடு பதினொன்றாகத் தான் இருந்தார். இவரது குடும்பத்தைச் சுற்றி முஸ்லிம்களே அதிகம். அந்த நாட்களில் மதபேதமே இல்லை. இந்த சூழ்நிலை அவருக்கு பெருந்தன்மை மிக்க இதய வளர்ச்சிக்கு அடிகோலியதுடன் ஒரு தேசிய மட்டத்தில் உயர்வதற்கும் ஆதாரமானது. போஸ்5-ஆவது வயதில் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆங்கிலேயர் பாணியில் கல்வியும் மனவளமும் அப்பள்ளியில் ஊட்டப்பட்டன. ஏழு ஆண்டுகள் அங்கே கற்றார். வகுப்பில் முதல்வர் அவரே. ஆனால் விளையாட்டுகளில் சிறக்கவில்லை. 1909-இல் பள்ளியை விட்டு விலகி கட்டாக்கில் கல்லூரிப்பள்ளி ஒன்றில் சேர்ந்தார். தாய்மொழியாகிய வங்காள மொழியில் அப்போது அவரது ஆற்றல் சுமார்தான் எனக் கூறவேண்டும். அவர் எழுதிய முதல் பாடமான 'பசு' கட்டுரையில் பல தவறுகளைச் செய்திருந்தார். இதைக்கண்டு எல்லாரும் நகைத்தனர். ஆனால் தலைமை ஆசிரியர் அவருக்கு ஊக்கமளித்து வந்தார். தலைமை ஆசிரியர் மாறிச் சென்ற காலத்தில் போஸின் கண்களில் நீர் துளிர்த்தது. அவரது தலைமை ஆசிரியர் போஸின் வளர்ச்சிக்கு மற்றும் ஒழுக்க உணர்வுகளை பேணிக்காக்க உற்ற அணையாக இருந்தார். ஆனால் அதற்கு ஓர் உருக்கொடுத்தவர் விவேகாநந்தர்தான். போஸை விவேகாநந்தர் மிகவும் கவர்ந்தர். அவரது உண்மைத் தத்துவங்கள் மற்றும் விஞ்ஞானக் கொள்கைகள் போஸைக் கவர்ந்தன.

[1] 'Heroes of our Freedom struggle' by C. Gopalachari (1985) Page 46.

[2] மேற்படி

அரவிந்தர் தொடர்பு :

1913 இல் கல்கத்தா மாநிலக்கல்லூரியில் சேர்ந்தார். தெய்வீக வாழ்வுக்கு பால் உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதையும் தெய்வீக உணர்வு இல்லாத வாழ்க்கை வாழ்க்கை யாகாதென்றும் அதற்கு மதிப்போ, புகழோ இல்லை என்றும், மனிதனை உயர்த்தவல்லது தெய்வீகமே என்றும் உணர்ந்தார். அரவிந்தரின் போதனைகளும் எழுத்துக்களும் போஸைக் கவர்ந்தன. கல்லூரி விடுமுறையில் கட்டாக் வரும்போது கிராமங்களுக்குச் சென்று காலரா போன்ற வியாதிகளில் துன்புற்ற மக்களுக்கு தொண்டு செய்தார்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் தொடர்பு :

கல்கத்தாவில் ஒரு நாள் இராமகிருஷ்ண பரமஹம்சரைத் தேடிக் காண வேண்டும் என்ற அவா அவருள்ளத்தில் திடீரென எழுந்தது. அவர் தன்னை ஒரு சீடனாக ஏற்றுக் கொள்ளலாம் என நம்பினார். லாக்மன் ஜோலா, ரிஷிகேஸ், ஹரித்துவார், மதுரா, பிருந்தாவன் மற்றும் கயா போன்ற இடங்களில் சுற்றினார். இந்த அனுபவம் இவருக்குப் புதுமையாகவும், எத்தக் காரியமும் நிறைவேறாததாகவும் படவே நேராக வீட்டுக்கு வந்தார். நோய்வாய்ப்பட்டார்.

கல்லூரிப் படிப்பு :

கல்லூரியில் அவர் புத்தகப் புழுவல்ல. பள்ளி மாணவர் தலைவராக இருந்தார். ஒரு முறை ஆங்கில பேராசிரியர் ஆதன் என்பவர் ஒரு இந்திய மாணவனைத் தாக்கிவிட்டார். இருமுறை இச்செயலை அவர் செய்தவுடன் அம்மாணவனை தாம் கண்டித்ததாகவே உண்மைக்கு மாறாகக் கூறினார். இதனால் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டு பேராசிரியரைத் தாக்கினர். கல்லூரி மூடப்பட்டது. அப்போது சுபாஷ் கல்லூரி மாணவர்களுக்குத் தலைவராகவும் அவர் சார்பாக வாதாடுபவருமாக ஈடுபாடு கொண்டார். ஈராண்டுகள் இதனால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆனால் பல்கலைக்கழகம் அவரை வேறு கல்லூரியில் சேர்ந்து படிக்க அனுமதித்தது. ஸ்காட்ஸ் சர்ச் கல்லூரியில் சேர்ந்து 1919 இல் பி. ஏ. முதல் வகுப்பில் தேறினார்.

ஒரு ஐ.சி.எஸ். அலுவலர் :

சுபாஷ் இளைஞராக இருந்தபோது வங்கப்பிரிவினை நடந்தது. இது தேசிய அளவில் பெறும் கலக்கத்தை விளைவித்தது. வங்கத்தில் பயங்கர நிலை உருவானது. அமிர்தசரஸில் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையும் நாடெங்கும் அமைதியின்மையை விளைவித்தது போஸின் பெற்றோர்கள் இதனால கலக்கமுற்று பயங்கர வாதத்தில் போஸ் ஈடுபடுவார். என்று கருதி அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி ஐ.சி.எஸ். தேர்வுக்குத் தயார் செய்தனர் இதை தம் விருப்பத்திற்கு மாறாகஏற்றுக்கொண்டு போஸ் இங்கிலாந்து சென்றார். ஐ.சி.எஸ் தேர்வில் நான்காவதாகத் தேறினார். [1]கேம்பிரிட்ஜில் உள்ளமாணவர்களின்சுதந்திரபோக்கை அவர் விரும்பினார். ஆனால் கல்கத்தாவில் இருந்த மாணவர்கள் மீதான அடக்குமுறைக்கு மாறான இந்த நிலையை நன்கு உணர்ந்தார்.

பதவி ராஜினாமா :

ஐ.சி.எஸ். தேறிடினும் அரசுபணியில் மனம் செல்லவில்லை. சிவில் பணியிலிருந்து ராஜினாமா செய்தார். இதைக்கண்டு பிரிட்டிஷ் அரசின் அலுவலர்கள் அதிர்ச்சியுற்றனர். அவரது பெற்றோர்களும் ஏமாற்றம் அடைந்தனர். தன்னுடைய பதவி ராஜினாமா மூலம் தனது தேசத்தின் விடுதலைதான் முக்கியம் என்பதையும் தனது சுயநலத்திற்கான பதவியும் படாடோப வாழ்க்கையும் அதனை விடப் பெரிதல்ல என்பதை உலகுக்கு உணர்த்தினார். ஆங்கிலேயர் தம் நாட்டில் அனுபவித்த சுதந்திர வாழ்க்கையே இதற்கு உத்வேகமளித்தது.

காந்தியடிகளுடன் சந்திப்பு :

ஒரு நாள் கவிக்குயில் சரோஜினிநாயுடு இங்கிலாந்தில் இந்தியர்கள் அளித்த விருந்தில் பேசிய பேச்சு போஸினைக் கவர்ந்தது. போஸ் தம் தாய்நாட்டைப் பற்றி பெருமைப்பட முடிந்தது. அவர் எழுதும்போது' இங்கே நாயுடு அவர்கள் பேசிய பேச்சு என் இதயமெங்கும் புளகாகிதத்தை ஏற்படுத்தியது' என்று குறிப்பிட்டார். கேம்பிரிட்ஜ் நீதி போதனைக்கல்வியில் பி.ஏ. தேர்ச்சி பெற்றார். இந்தியாவுக்கு 16-07-1921-இல் திரும்பினார். காந்தியடிகளை மணி பவனில் சந்தித்தார். காந்தியடிகளுடன் உரையாடினார். வெளிநாட்டுப் பொருட்களைப் பகிஷ்கரிப்பதிலும் சுதேசி இயக்கத்தினாலும் சுதந்திரம் கிட்டும். என்ற கோட்பாட்டில் போஸுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவர் கல்கத்தா சென்று தேச பந்து சித்தரஞ்சன்தாஸ் அவர்களைக் கண்டார். அவரே வங்கத்தில் அன்றைய அரசியல் தலைவர். அப்போது காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கி இருந்தார். வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்தார்கள் ஆசிரியர் மற்றும் மாணவர் வகுப்பறைக்கு வெளியே இருந்தனர். இந்த நிலையில் மாணவர்களுக்கு தேசிய கல்வியை ஊட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. வங்கத்தில் சி.ஆர். தாஸ் அவர்கள் இந்த பொறுப்பினை போஸுக்கு அளித்தார். தேசியக் கல்வியைப் பரப்ப ஏற்படுத்தப்பட்ட தேசிய கல்விச்சாலைக்கு சுபாஸ் தலைவரானார்.

[1] 'Heroes of Freedom struggle by C. Gopalachel (1985) Page 46

தேசிய தொண்டர் படை உருவாதல் :

இந்தக் கல்விப் பணி எடுபடவில்லை. இந்த நேரத்தில் வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசின் சார்பான ஒத்துழைப்பைக்கோரி கூட்டங்களில் பேசினார். இம்முயற்சியை முறியடிக்க காங்கிரசார் இளவரசரின் கூட்டங்களை பகிஷ்கரித்தனர். இதற்காக தேசிய தொண்டர் படை உருவானது. இதை அரசு சட்டவிரோதமானது என ஆணையிட்டது. காங்கிரஸ் இதை புறக்கணித்தது சுபாஷ் இந்த தொண்டர் படைத்தலைவராக இருந்ததால் 6 மாதம் சிறைத்தண்டனை அடைந்தார். சிறையிலிருந்து வெளிவந்த போது வங்கத்தில் ஏற்பட்ட வெள்ள நிவாரணப்பணிகளில் ஈடுபட்டார். அவரது சேவையை அரசு பாராட்டியது.

சுயராஜ்யக்கட்சியின் துவக்கம் :

சௌரிசௌரா நிகழ்ச்சியின்போது பல போலீஸ்காரர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். [1] இதைத் தொடர்ந்து காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை தாற்காலிகமாக நிறுத்திவைத்தார். காந்தியடிகளும் அவரது சகாக்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். இத்தருணத்தில் காந்தியடிகள் மீதான விசாரணையை சி. ஆர் தாஸ் வர்ணிக்கும்போது, கிறிஸ்துவை ரோமன் கவர்னர் போண்டியஸ் பிலாத்து விசாரணை செய்ததற்கு ஒப்பானது என்றார். [2] சி.ஆர். தாஸ், மோதிலால் மற்றும் அவர்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்து சுயராஜ்யா என்ற கட்சியை 1923-ல் தொடங்கினார். அவர் ஒத்துழையாமை என்ற போராட்டத்தைக் கைவிட்டு சட்ட சபைகளில் நுழைந்து அரசிற்குள் இருந்து கொண்டே அரசை எதிர்க்கவேண்டுமென திட்டமிட்டார்.

மீண்டும் சிறைவாசம் :

1924 - ல் சி. ஆர். தாஸ் கல்கத்தாவின் மேயரானார். போஸ் முதல் இந்தியத் தலைமைச் செயல் அலுவலரானார். போஸ் இந்தப் பதவிக்கான சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு பாதித்தொகையாக ரூ. 1500 தான் பெற்றார். ஆனால் அரசு எந்தக் குற்றச்சாட்டுமில்லாமல் அவரைச் சிறைப்படுத்தியதோடு வங்காள அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பித்தது. எனினும் சிறையில் இருந்து கொண்டே அவர் அப்பதவி வகிக்க அனுமதிக்கப்பட்டார். போஸை விடுதலை செய்யக்கோரி போராட்டமும் வன்முறையும் அதிகரித்தது. ஆனால் அரசினர் செவிமடுக்காமல் அவரை ஏனைய தேசியத் தலைவர்கள் அடைபட்டுக்கிடந்த மாண்டலே சிறைக்கு மாற்றிவிட்டனர்.

யுகப் புருஷர் போஸ் :

லாலா லஜபதிராய், லோகமான்ய பாலகங்காதர திலகர் ஆகியோருடன் சிறைவாசமிருந்தார். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் போஸிக்கு பெரும் கௌரவத்தையும் புகழினையும் தேசிய நிலையையும் அவருக்கு ஈட்டுத் தந்தன. அவரது அரசியல் குருவும் நம்பிக்கை மிகுந்த தலைவருமான சி.ஆர். தாஸ் அவர்கள் 1925-ல் காலமானபோது போஸ் பர்மாவில் சிறையில் இருந்தார். [3] இப்போது வங்கத்தின் தலைமைப் பணி இவரது தோளில் சுமத்தப்பட்டது. இரண்டரை ஆண்டு சிறைவாசத்திற்குப்பின் மே 1927-ல் அவர் விடுதலை அடைந்தார். வங்கத்தின் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் பொதுச் செயலராக நேருவுடன் நியமிக்கப்பட்டார். நேருவும், போஸிசும் இந்தியாவுக்கு பரிபூர்ண சுதந்திரம் வேண்டுமென்றனர். ஆனால் சில காங்கிரஸ்காரர்கள் டொமினியன் அந்தஸ்து போதும் என்றார்கள். அவர் காந்தியடிகளின் இயல்பான போக்கினையும் மற்றும் மிதவாதத்தையும் ஏற்கவில்லை. தனியே சுதந்திர கட்சி ஒன்றை நிறுவினார். லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் நேரு, காங்கிரஸ் தலைவரானார். அன்றிலிருந்து நேருவே காந்தியடிகளாரின் இதய பூர்வமான சீடரானார்.

சிறை வாழ்வும் மேயர் பதவியும் :

இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டில் காந்திஜி கலந்து கொள்வதை போஸ் எதிர்த்தார். இந்த மாநாட்டில் எந்த உருப்படியான காரியமும் நிறைவேறவில்லை. இந்தியா திரும்பிய காந்திஜி மக்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். பலர் கைதாயினர். மீண்டும் போஸ் சிறைப்பட்டார். அங்கே லத்தி அடியும் கொடுமைகளும் ஏற்றுக் கொண்டார். சிறையில் இருந்தபோது கல்கத்தா நகர மேயர் ஆனார். மற்றும் அகில இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

---

1. Ibid page 52 Heroes of freedom strggle by C. Rajagopalcharin (1985)
2. Ibid page 52.
3. A life skectch of subbas Chandra Bose Page 21

வெளிநாட்டில் சிகிச்சை :

1933 சூலையில் ஐரோப்பாவுக்கு மருத்துவ சிகிச்சைக்கு சென்றுவர அனுமதிக்கப்பட்டார். ஆனால் செல்லுமுன்னர் தமது பெற்றோரை அவர் பார்க்க அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. அவர் ஜெர்மனிக்கு செல்லக்கூடாது என்றும் ஆணையிட்டது. அவர் வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுவந்த போது அவரது தந்தையார் மரணமடைந்தார். தந்தைக்கு இறுதிக் கடன் முடிக்க இந்தியா வந்தார். ஆனால் வெளி உலகத் தொடர்பு அவருக்கு மறுக்கப்பட்டது. 10-1-1934-ல் மீண்டும் ஐரோப்பா சென்றார். [1] அப்போது ஆப்கானிஸ்தானின் பழையமன்னர் அமானுல்லா ஐரிஷ் தலைவர் டிவேரல முதலிய தலைவர்களைச் சந்தித்தார்.

ஹிட்லரின் பேச்சினைக் கண்டித்தல் :

ஜெனிவாவில் வித்தல்பாய் படேலின் சிலையைத் திறந்து வைத்தார். இவரே ஜெனிவாவில் உள்ள சட்டப்பேரவையில் முதல் இந்தியத் தலைவர் [2] இந்தியர்களை அவமானப்படுத்தும் ஆங்கிலப் படங்கள் திரையிடப்படுவதை எதிர்த்தார். கருப்பர்களை ஆள வெள்ளையர்களே தேவாதிகாரம் பெற்றுள்ளனர் என்ற ஹிட்லரின் பேச்சை பகிரங்கமாக கண்டித்தார். வியன்னாவில் இருந்த போது ''இந்தியர் போராட்டம்'' என்ற நூலை எழுதினார். 1936 ஏப்ரலில் அவர் இந்தியா வந்த போது இந்திய படகிலேயே வந்தார். அப்போது ஒரு பெருங்கூட்டமே அவரை வரவேற்றது. ஆனால் சீக்கிரமே அவரைச் சிறைக் கூடத்திற்கு அனுப்பியது. வெள்ளையர் அரசு அப்போதும்கூட சுதந்திரக்கொடியை பறக்க விடுங்கள் என்று இந்திய மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். அவரைச் சிறைப்படுத்தியதற்கு பெரும் அமளி ஏற்பட்டது. எனவே 1937-ல் விடுதலை செய்யப்பட்டார். அடுத்த ஆண்டு நடந்த திரிபுரா காங்கிரஸ் மாநாட்டில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைமைப் பதவியும், காந்திஜிபோக்கும் :

1939-ல் மீண்டும் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது காந்திஜி நிறுத்திய பட்டாபி சீதாராமையாவுக்கு எதிரான வெற்றியாகும். காந்திஜி இதனை தன் தோல்வி என்று சொன்னார். திரிபுரா காங்கிரஸ் தலைவராக போஸ் வீற்றிருந்த போதிலும் ஒரு பெரும் எதிர் முகாம்களின் சண்டையினால் போஸ் தலைமைப் பதவியை இராஜினாமா செய்தார். இதனால் பிறந்ததுதான் ''பார்வர்டு பிளாக்'' என்ற முன்னேற்றக் கட்சி.[3] இந்தக் கட்சியின் கண்ணோட்டம் தீவிர வாதத்தில் இறங்கி இந்தியாவின் சுதந்திரத்தை பெறுவது என்பதாகும். இது காங்கிரஸாருக்கு ஒவ்வாத செயலாகும். கல்கத்தாவில் இந்தியர்களால் வெறுக்கப்பட்ட ''ஹோவல் என்ற ஆங்கிலேயர் சிலையகற்றும் போராட்டம் நடந்தபோது போஸ் தண்டிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார். எனினும் போராட்டம்வலுவுற்று சிலையகற்றப்பட்டது. அதன் பிறகு போஸின் உடல் நிலை சீர்கெட்டது. ஆனால் விடுதலை கிடைக்கவில்லை. இதற்காக சிறையின் உள்ளேயே உண்ணாவிரதமிருந்தார். 26-11-1940-ல் வங்கக் கவர்னருக்கு அவர் எழுதிய கடிதம் பத்திரிகைகளில் வந்த போது இந்தியர் ஒவ்வொருவரின் நரம்புகளையும் சுண்டி இழுத்தது. கீழே குறிப்பிட்ட சில வரிகள் போஸின் திடமான நம்பிக்கை மற்றும் தியாக உணர்வுகளை பிரதிபலிப்பதாகும்.

''இது அழியும் உலகம் இதில் எல்லாமே அழியக்கூடியவை—அழியப்போகின்றவை ஆனால் எண்ணங்கள்—உயர் இலட்சியங்கள்—கனவுகள் என்றுமே அழியா. இரு தனி மனிதன் ஓர் எண்ணத்தின் வீச்சில் அழிவுறலாம். ஆனால் அந்த எண்ணமே அவன் அழிவுக்குப் பிறகு ஓராயிரம் உயிர்களைப் பரிணமிக்கிறது.

தனிமனிதன் இறக்கிறான். ஆனால் நாடோ வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று நான் மரணத்தைத் தழுவுகிறேன். இதனால் இந்தியா வாழும், அது தன் சுதந்திரத்தில் பூத்துக்குலுங்கும். பேரொளியில் திகழும்.[4]

உண்ணாவிரதமும், விடுதலையும் :

இந்தியா எங்கும் அவரது விடுதலை வேண்டி கோரிக்கை முழக்கம் எழுந்தது. அவரது 16 ஆம் நாள் உண்ணாவிரதத்தின்போது அரசு பணிந்தது. டிசம்பர் 1940-ல் அவரை விடுதலை செய்தது. ஆனால் போஸை வெளியே விட்டுவைக்க விரும்பவில்லை. போலீஸ் அவரை வளையவந்தது. 27-01-1941-ல் மீண்டும் அவர் மீது குற்றச்சாட்டு ஏற்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டார்.

[1] Ibid page 54
[2] Ibid page 54
[3] Ibid page 65
[4] Ibid pa e 55

ஆத்மார்த்த விசாரணை:

இரண்டாம் உலக யுத்தம் தொடர்கிறது. காந்திஜியோ மற்ற தலைவர்களோ அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் அரசைப் பணியவைக்க முடியாமல் போனது. போஸுக்கு மிக்க மன வருத்தத்தை அளித்தது. இது போன்ற தருணம் இனி வரப்போவதில்லை என்று அவர் கருதினார். இப்போது சுதந்திரம் இல்லை எனில் எப்போதுமில்லை,எல்லாவற்றையும் துறந்த நிலையில் ஆத்மார்த்த விசாரணைக்கு தன்னை உட்படுத்திக் கொண்டார். தியானத்தில் அமர்ந்தார். தாடி வளர்ந்தார். தேசத்தை விட்டு நீங்கி செல்ல எல்லா ஆயத்தங்களையும் செய்து கொண்டிருந்தார். ஜப்பான் மற்றும் ஜெர்மன் போன்ற நாடுகளின் ஒத்துழைப்பைக் கோருவதில் தவறில்லை என்று நம்பினார்.

நாடு துறத்தலும், ஜப்பானியர் உதவியும்:

16-1-1941-ல் ஜியோகுதின் என்ற பெயரில் ஒட்டகம் ஓட்டியாக காபூல் நகருக்கு சென்றார். அங்கே அவருக்காக காத்திருந்த நண்பர்களுடன் சேர்ந்துகொண்டார். அவர் ஹிட்லரை சந்தித்துப் பேசியதாக தகவல்கள் வந்தன. ஹிட்லர் போஸை இந்தியாவின் தந்தை[1] என்றழைத்தார். ஜெர்மனியிலிருந்து V. Bolt மூலமாக சுமத்ரா சென்றார். அங்கிருந்து ஜப்பான் சென்றார். ஜப்பானியர்கள் அவருக்கு எல்லா உதவிகளையும் செய்தனர். ஜப்பானின் உதவியோடு இந்திய தேசிய இராணுவத்தை பர்மாவில் உருவாக்கினார். அவர் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசினை 21-10-1943-ல் ஜப்பானில் அமைத்தார். ஜப்பான் இதனை 23-10-1943-ல் ஏற்று ஒப்புதல் அளித்தது.

சலோ டெல்லி சலோ கீதம் :

சிங்கப்பூரில் உள்ள ''கத்தாய்'' மன்றத்தில் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அங்கே எழுச்சி மிக்க ஆர்வமுள்ள கூட்டம் ஏகோபித்து வரவேற்றது.

அங்கேயுள்ள கூட்டமே கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கியது. அங்கேதான் ஆஸாத் இந்து ரேடியோ நிலையத்திலிருந்து ''சலோ டெல்லி சலோ'' என்ற வீரமுழக்கம் முழங்கினார். பர்மா, மலாயா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள இந்தியர்கள் போஸுக்கு ஏராளமான பண உதவி அளித்தனர். [2]இந்தியாவின் எல்லை வரை இந்திய தேசிய பட்டாளம் வந்தது. இப்படை கூலிப்படை அல்ல. இது விடுதலைப் படை,தியாகப்படை, தாயகத்தின் போர்ப்படை என்று உலகமெங்கும் தெரிய வந்தது. எல்லோரும் போஸின் பட்டாளம் இந்தியாவின் அடிமைத்தளையை அகற்றும் விடுதலை முழக்கம் கேட்கப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது பார்மோசா தீவுகளுக்கு அவர் சென்ற விமானம் எரிந்து வீழ்ந்து அகால மரணமடைந்தார்.[3] என்ற செய்தியை ஜப்பான் ரேடியோ 23—08—1945 அன்று அறிவித்தது.

மரணத்திற்குப் பிறகு:

ஜப்பான் சரணாகதி அடைந்த ஒன்பதாவது நாளில் இச்சம்பவம் நிகழ்ந்தது. இதன்பிறகும், இந்திய சுதந்திரத்திற்குப் பிறகும் போஸை பற்றி எந்த செய்தியும் இல்லை. அவர் இறக்கவில்லை என்று கருதிக் கொண்டிருப்போர் இன்னும் பலர் ''நேதாஜி'' என்று அன்புடன் ஒவ்வொரு இந்தியனும் அழைத்த ஒப்பற்ற மனிதராகவும் பிறவித் தலைவராகவும் அஞ்சாத போர் வீரனாகவும் வாழ்ந்தார். அகிம்சை வழியில் காந்தியடிகளைப் போல் சாத்வீக நெறிகளில் சுதந்திரத்தை எதிர் நோக்கி இருக்க அவரால் முடியவில்லை. ஆனால் போஸின் வேகமும் தீவிர உழைப்பும் என்றுமே அவரை விட்டகன்றதில்லை. இந்தியாவின் சுதந்திரத்தைக் கண்டு களிக்க இன்று அவர் இல்லை. ஆனால் அவர் வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்று விட்டார். அவரது கீழ்க்கண்ட பொன் மொழிகள் அவரது தியாக வாழ்க்கைக்கு ஓர் அணி சேர்ப்பதாகும்.

இந்தியர்களுக்கு ஓர் அறைகூவல் :

''இந்திய பெருமக்களே உங்களுக்காக ஒன்று கூறுவேன் மனிதன் அடிமையாய் இருப்பதை விட படுசாபம் உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை என்பதை நீங்கள்மறக்க வேண்டாம். தவறுகளுக்கும் அநீதிகளுக்கும் மட்டும் விட்டுக் கொடுத்துப் போவதைப் போல கொடூரமான குற்றம் எதுவுமில்லை என்பதையும் நீங்கள் மறக்க வேண்டாம். ஏற்றத்தாழ்வை எதிர்த்து போராடுவதே மேலான ஒன்று. அதற்கு எத்தனை பலியானாலும் சரி அதற்காக போராடுவதை என்றும் நிறுத்த வேண்டாம். இதனை மறக்க வேண்டாம். வாழ்க்கையின் அச்சாணி சுதந்திரம், சுதந்திரம் இல்லாத வாழ்க்கை வெற்று வாழ்க்கை'' என்று அறைகூவல் விடுத்தார். இதை மனித குல வரலாற்றில் எழுதிப் பொறித்தவர்கள் ஒரு சிலரே.

---

[1] Ibid p. ge 57

[2] Ibid p. ge 58

[3] Ibid Page 58

அவர்களில் ஒருவரே போஸ். இருண்டதோர் காலகட்டத்தில் இந்தியாவில் தோன்றிய விடிவெள்ளி அவர். புனையப்படாத காவிய வாழ்க்கை அவருடையது. இந்திய மண்ணின் ஏகோபித்த வீரபுத்திரன். பிறப்பிலே வீரமும் தியாக உணர்வும் கொண்ட மாவீரன். கருவிலே திரத்தின் திரமாக விளைந்த மானிட முத்து. இந்தியாவின் அழியாச் சொத்து. குருதிப் புனல் கொந்தளிக்க எரிமலையில் சங்க நாதம் செய்த கனல் ஊற்று. சங்கத் தமிழ் மைந்தனுக்கு நிகரான வங்கத்து மைந்தன். இந்த நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்போர் மலிந்த இந்த நாட்டிற்கு நான் என்ன செய்தேன் என்று அல்லும் பகலும் ஓல்லும் வகையான் தொண்டாற்றிய தொண்டன். வங்கத்தில் சிங்கம். நேதாஜி ஒரு யுகப்புரட்சியாளர். இவரைப் போன்ற ஒரு யுகப் புருஷர் தோன்ற இன்னும் ஓராயிரம் ஆண்டுகளாவது ஆகும். வீரர்கள் எப்போதாவதுதான் பிறக்கிறார்கள். அவர்களே வரலாறு சமைக்கிறார்கள். எனவே நேதாஜியை ஒரு ''யுகப்புருஷர்'' என்றால் அது மிகையே அன்று.

முற்றும்.

8. கற்பலங்காரி சரித்திரம்.

ஒருநாள் எங்களுக்குப் பள்ளிக்கூடம் இல்லாத விடுமுறை நாளாயிருந்தபடியால், நாங்கள் பழைய பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது என் தாயார் வந்து எங்களுடைய படிப்பைப் பரிசோதித்தார்கள். பிறகு ஞானாம்பாள் என் தாயாரைப் பார்த்து ''அத்தையம்மா! உங்களுக்கு அநேக சரித்திரங்கள் தெரியுமே! யாதொரு பதிவிரதையினுடைய சரித்திரந் தெரிந்திருந்தால் சொல்ல வேண்டும்'' என்று பிரார்த்தித்தாள். ''அப்படியே சொல்லுகிறேன்'' என்று என் தாயார் சொல்லத் தொடங்கினார்கள்.

''சில காலத்துக்குமுன் திரிசிரபுரத்தில் அரசு செய்து வந்த விஜயரங்க சொக்கலிங்க நாயகர் சந்ததியில்லாமல் இறந்து போனபடியால், அவருடைய பத்தினியாகிய மங்கம்மாளுக்குப் பட்டாபிஷேகமாகி, அவள் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து, மனுநீதி தவறாமல் அரசாட்சி செய்து வந்தாள். அவளுக்குக் காமியப்ப நாயக்கன் என்ற பெயரையுடைய தம்பி ஒருவன் இருந்தான். மங்கம்மாளுக்குத் தம்பிமேலிருந்த பிரியத்தினால், தன்னுடைய நாட்டில் சில ஊர்களைப் பிரத்தியேகமாய்ப் பிரித்து அவனுடைய ஸ்வாதீனப்படுத்தி, தனக்குள்ளாக அவன் சிற்றரசராயிருந்து அரசாட்சி செய்யும்படி திட்டஞ் செய்தாள். அவன் புதுக்கோட்டையைத் தனக்கு ராஜதானி ஆக்கிக் கொண்டு அரசாட்சி செலுத்தி வந்தான். அவனுக்கு மகோன்னத பதவி கிடைத்த உடனே மதிமயங்கி, சமஸ்தான காரியங்களை எவ்வளவும் கவனிக்காமல் காமாதுரனாய்ப் பரஸ்திரீ கமனம் முதலிய துர் விஷயங்களிற் காலத்தைச் செலவழிக்கத் தலைப்பட்டான். அவனுடைய ஆஸ்தான உத்தியோகஸ்தர்களில் ஒருவனாகிய மங்களாகரம் பிள்ளையினுடைய பத்தினி கற்பலங்காரி என்பவள், திவ்விய சுந்தரமும் அவளுடைய பெயருக்குத் தகுந்த குணமும் உள்ளவளாயிருந்தாள். அவளிடத்தில் அந்த துஷ்ட ராஜனுக்கு மோகம் உண்டாகி அவளைத் தன் கைவசப்படுத்தும் பொருட்டு, அவளிடத்துக்குச் சில ஸ்திரீகளைத் தூதாக அனுப்பினான். அவர்கள், அவளுடைய புருஷன் வீட்டிலில்லாத சமயம் பார்த்து, அவளிடஞ் சென்று ''அம்மா! நீ செய்த தவமகிமையினால் உனக்கு ராஜயோகம் வந்து விட்டது; உன்னைப் போல் அதிஷ்டசாலிகள் உண்டா? நம்முடைய அரசரே உன்னுடைய அழகை விரும்புவாரானால், உன்னுடைய பாக்கியத்துக்கு ஒரு வரம்பு உண்டா? அவருடைய தயவைப் பெற எத்தனையோ ஸ்திரீகள் தவஞ் செய்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் சித்திக்காமல் உனக்கு அவருடைய கிருபை கிடைத்தது எவ்வளவு பெரிய அதிஷ்டம்! இனி இந்த நாட்டுக்கெல்லாம் நீயே அரசி! சமஸ்தான காரியங்களெல்லாம் உன்னுடைய ஏவலின்படியே நடக்கும். ஆகையால் அவருடைய இஷ்டபூர்த்தி செய்து, அஷ்ட ஐசுவரியங்களையும் கைக்கொள்ளு!'' என்றார்கள். இதைக் கேட்டவுடனே கற்பலங்காரிக்குக் கோபமுண்டாகிச் சொல்லுகிறாள்: 'எனக்கு அரசரும், குருவும், தெய்வமும் என்னுடைய பர்த்தாவே அன்றி வேறல்ல: அவருடைய கிருபையே எனக்கு அஷ்ட ஐசுவரியம்: அவருக்கு முன்பாக மற்ற அரசர்கள் எல்லாரும் அஜகஜாசரம், உங்கள் அரசருடைய கிருபைக்காகத் தவம் செய்கிற ஸ்திரீகளே, அந்தக் கிருபையைப் பெற்றுக் கொள்ளட்டும், எனக்கு வேண்டாம்: வேண்டாம்! என்றாள்.

''மறுபடியும் அவர்கள் அந்த உத்தமியின் புத்தியைக் கலைக்கிறதற்குச் சகல தந்திர வித்தைகளை உபயோகப்படுத்தியும், அவள் இசையவில்லை; அவர்கள் உடனே புறப்பட்டுப்போய், அரசனுக்கு நடந்த காரியங்களைத் தெரிவித்தார்கள். அவள் நிராகரித்த சங்கதி தெரிந்தவுடனே, அவனை அதிகம் அதிகமாக ஆசைப்பேய் பிடித்து ஆட்டத் தலைப்பட்டது. அவளைப் பலாத்காரமாய்க் கொண்டுபோகிற பக்ஷத்தில், தன்னுடைய சகோதரி மங்கம்மாளுக்குத் தெரிந்தால் தன்னைச் சிரசாக்கினை செய்வாளென்று பயந்து அவன் பலாத்காரம் செய்யத் துணியவில்லை. பணமென்றால் பிணமும் வாயைத் திறக்குமானபடியால், பணத்தைக்கொண்டே அவளை வசியஞ் செய்யவேண்டுமென்று நினைத்து, அவன் ஒரு பெரிய பெட்டியில் தங்க நாணயங்களையும் வேறொரு பெட்டியில் ரத்நாபரணங்களையும் நிரப்பி, அந்தத் தூதிகள் கையில் கொடுத்து, அவளிடத்திற்கு அனுப்பினான். அவர்கள் அந்தப் பெட்டிகளைக் கற்பலங்காரி வீட்டுக்குக் கொண்டுபோய்த் திறந்து காட்டி, அவளுடைய புத்தியை மயக்கப் பிரயாசப்பட்டார்கள். அவள் அவர்களைப் பார்த்து, 'ஸ்திரீகளுக்குக் கற்பே சிறந்த ஆபரணம்; அந்த ஆபரணம் போய்விட்டால், இந்த ஆபரணங்களினால் வரும் பிரயோஜனம் என்ன?'' என்று சொல்லி, அந்த ஆபரணங்களை உதைத்துத் தள்ளி அவர்களையும் தூஷித்துத் துரத்திவிட்டாள். அவர்கள் போய்ச் சற்று நேரத்துக்குப் பின்பு வீட்டுக்கு வந்த தன் பர்த்தாவிடத்தில் சகல சங்கதிகளையும் தெரிவித்து ''இனிமேல் இந்த அரசனிடத்தில் உத்தியோகம் செய்வது முறையல்ல; உத்தியோகத்தை விட்டுவிட்டுப் பிச்சையெடுத்தாயினும் பிழைப்பது உத்தமம்'' என்றாள். அவளுடைய வார்த்தையைப் புருஷன் அங்கீகரித்துக் கொண்டு உத்தியோகம் வேண்டாமென்று ஒரு பத்திரிகை எழுதி அனுப்பிவிட்டு, அவரும் அவருடைய பத்தினியும் ஊரைவிட்டுப் புறப்பட்டு அடுத்த கிராமத்துக்குப் போய், ஒருவருக்குந் தெரியாமல் அந்தரங்கமாக வசித்தார்கள். உத்தியோக

வரும்படியைத் தவிர வேறே சீவனத்துக்கு மார்கம் இல்லாதபடியால், உத்தியோகம் போன பிற்பாடு அவர்கள் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. அவர்களுடைய நகைகள், பாத்திர சாமான்கள் முதலியவைகளை விற்றுச் சிலநாள் காலக்ஷபஞ் செய்தார்கள். பிற்பாடு கையில் ஒரு காசும் இல்லாமல் கடன் கொடுப்பாருமில்லா மல் கைப்பாடுபடவுந் தெரியாமல், இராப்பட்டினி, பகற் பட்டினியாயிருக்கவும் ஆரம்பித்தார்கள். அந்த அரசனுக்கு அவர்கள் போயிருக்கிற இடம் சிலநாள் தெரி யாமலிருந்து பிற்பாடு தெரிந்தது. சாம, தான, பேத, தண்டம் என்கிற நாலு உபாயங்களில், முந்தின மூன்று உபாயங்களைச் செய்துவிட்டோம். இனிமேல் நாலாவது உபாயமாகிய தண்டத்தை உபயோகிப்பதே காரியமென்று அவன் நிச்சயித்து, தானாயிறந்துபோன ஒரு அநாதைப் பிரேதத்தை, நடுச்சாமத்தில் அவர்கள் இருக்கிற வீட்டிற் போட்டு விடும்படியாயும், மங்களாகரம் பிள்ளை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டிப் பிடிக்கும்படிக்கும் ஜாக்கிரதை செய்தான். அந்தப் பிரகாரம் சேவகர்கள் வந்து, மங்களாகரம் பிள்ளையைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். கற்பலங்காரி வெளியே போகாதபடி வீட்டைச் சுற்றிப் பாரா வைத்து விட்டார்கள்.

உத்தியோகம் போன பிற்பாடு, தரித்திர முதலிய சகல கஷ்டங்களையும் தைரியமாகச் சகித்த அந்தக் கற்பலங்காரி, தன் புருஷனைக் குற்றவாளியாக்கி, சேவகர்கள் பிடித்துக் கொண்டு போனதைச் சகிக்கமாட்டாதவளாய் நெருப்பிலே போட்ட புஷ்பம்போல வாடிப் பதைத்து விம்மி அழுதாள். அந்தச் சமயத்தில் அந்தக் கொடுங்கோல் மன்னனுடைய தூதிகள் வந்து கற்பலங்காரியை நோக்கி ''தானாய் வருகிற ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவது போல நீயே உன்னுடைய வாழ்வைக் கெடுத்துக் கொள்ளுகிறாய். உன் புருஷன் கொலை செய்ததாகச் சாட்சிகளால் குற்றம் ஸ்தாபிக்கப்படுகிறபடியால், மரண தண்டனை கிடைக்குமென்பது நிச்சயம்; ஆனால் நாங்கள் சொல்லுகிறபடி, நீ கேட்டால் உன் புருஷனுக்கு ஜீவலயம் நேரிடாது. நீயும் எப்போதும் சுமங்கலியாகவும், பாக்கியவதியாகவும் இருப்பாய்! எங்களுடைய வார்த்தையை நீ தள்ளிவிட்டால் நீ அமங்கலிதான்'' என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே, அந்தப் பதிவிரதையினுடைய சித்தம், சிறிதுஞ் சலனப்படாமல் அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறாள்; ''எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வந் தண்டியாமல் விடாது'' மானம் பெரிதே அல்லாமல் ஜீவன் பெரிதல்ல; என்றைக்கிருந்தாலும் மனுஷ தேகம் எடுத்தவர்கள் சாவது நிச்சயமேயல்லாது, சாகாத வரம் வாங்கிக் கொண்டு வந்தவர்கள் ஒருவரும் இல்லை. எப்படியும் ஒரு நாள் சாகப் போகிறவர்கள், சிலநாள் முந்திச் செத்தால் பாதகம் என்ன? நான் என் புருஷனைக் காப்பாற்றுவதற்காகக் கற்பை இழந்து, பாவத்தையும் பழியையும் நரகத்தையும் சம்பாதித்துக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், பதிவிரதா பங்கமில்லாமல் நானும் என் புருஷனும் இறந்து, நித்தியமோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை அடைவது உசிதம் அல்லவா?'' என்றாள். ''அப்படியானால் வருகிறதை நீ அனுபவித்துக் கொள்'' என்று அந்தத் துஷ்டர்கள் சொல்லிப் போய்விட்டார்கள். இனிமேல் கடவுளைத் தவிர வேறு திக்கு திசை இல்லாதபடியால், அந்த உத்தமி கடவுளை நோக்கிப் பிரலாபித்துத் தன் குறைகளைச் சொல்லி முறையிடுவாள் ஆயினாள்.

அவருடைய வீட்டைச் சுற்றிப் பாரா இருக்கிறவர்களில் ஒருவன், அவளுடைய புருஷனுக்கு மித்திரன் ஆனபடியால், குற்ற விசாரணை எப்படி நடக்கிறதென்று விசாரித்துத் தெரிவிக்கும்படி அவனுக்குச் சொல்லியிருந்தான். அதிரகசியமாய் விசாரணை நடந்தபடியால், அவனுக்குக் கூட சில நாள் வரைக்கும் சங்கதி வெளியாகாமலிருந்து, பிறகு பிரகடனம் ஆயிற்று. மங்களாகரம் பிள்ளை கொலை செய்ததாகக் குற்றம் ஸ்தாபிக்கப்படுகிறதாகவும், ஆனால் மங்கம்மாளுடைய உத்தரவு இல்லாமல் மரண தண்டனை செய்ய அந்தச் சிற்றரசனுக்கு அதிகாரமில்லாதபடியால், மங்களாகரம் பிள்ளையை மரண தண்டனை செய்ய உடனே உத்தரவு அனுப்ப வேண்டுமென்று அந்தக் கொடியவன் மங்கம்மாளுக்கு ரகசியமாக எழுதிக் கொண்டிருப்பதாகவும், அந்தக் காவற் சேவகன் மூலமாகக் கற்பலங்காரி கேள்விப்பட்டு அவளுக்கு உண்டான மனக்கிலேசம் இவ்வளவென்று யார் விவரிக்கக்கூடும்? அம்புபட்டு விழுந்த மயில்போல், அவள் கீழே விழுந்து புரண்டு ''ஐயோ தெய்வமே! நான் என்ன செய்வேன்? இந்த அநியாயத்தை யாரிடத்திலே சொல்வேன்? பிரஜைகளால் துன்பத்தை அடைந்தவர்கள் அரசனிடத்தில் முறையிடுவார்கள்; அரசனே அக்கிரமம் செய்தால் உம்மைத் தவிர வேறே யாரிடத்தில் சொல்வேன்? என் புருஷனை இரட்சித்தருளும் ஸ்வாமி'' என்று முறையிட்டாள், பிறகு கடவுளது கிருபையால் அவளுக்குச் திடச் சித்தம் உண்டாகி, மங்கம்மாளிடத்திலிருந்து உத்தரவு வருகிறதற்குமுன், அந்த அரசியிடத்திற்குத் தான் எப்படியாவது போய்த் தன் புருஷனைக் காப்பாற்றுகிறதற்கு மார்க்கந் தேடவேண்டுமென்று நினைத்து, அந்தக் காவற்காரனுடைய சகாயத்தினால் அவள் நடுச்சாமத்தில் வீட்டை விட்டு வெளிப்பட்டுத் திரிசிரபுரத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போக ஆரம்பித்தாள். ஓடும்போதே தபாற்காரன், எதிரே வருகிறானாவென்று பார்த்துக் கொண்டு ஓடினாள். தங்க விக்கிரகம் போல் அவளுடைய மேனி பிரகாசிக்க, அவளுடைய கூந்தல் அவிழ்ந்து சோர, ஜலப்பிரவாகமாய்க் கண்ணீர் வடித்துக் கொண்டு அவள் ஓடுவதைப் பார்த்தவர்கள் - இவள் தேவஸ்திரீயோ! அல்லது ராஜ ஸ்திரீயோ!! என்று மயங்கி அவள் துக்கத்துக்காக இரங்கி அழாதவர்கள்

ஒருவருமில்லை. அவள் நடுவழியில் தபாற்காரன் வருவதைக் கண்டு அவனுக்கு நமஸ்காரம் செய்து "ஏதாவது விசேஷம் உண்டா?" என்று வினவ, அவன் மகாராணியிடத்திலிருந்து, மரண தண்டனை உத்தரவைக் கொண்டு போவதாகத் தெரிவித்தான். அவள் உடனே தபாற்காரனுக்குத் நீர்க்கு தண்டம் சமர்ப்பித்து, மரண தண்டனை உத்தரவை மாற்றுவதற்காகவே தான் மங்கம்மாளிடத்துக்குப் போவதாகவும், எப்படியும் அனுகூலம் கிடைக்குமென்றும், ஆகையால் அவன் புதுக்கோட்டைக்குப் போகாமல் தாமதிக்க வேண்டுமென்றும், மிகவும் பரிதாபமாய்க் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். இரக்க சுபாவமுள்ள அந்தத் தபாற்காரன், தேவஸ்திரீக்குச் சமானமாகிய அந்த ஸ்திரீயினுடைய பிரார்த்தனையை மறுக்கமாட்டாமல், ஒரு நாள் தாமதஞ் செய்வதாக ஒப்புக் கொண்டான். அந்தப்படி அவனிடத்தில் பிரமாணம் வாங்கிக் கொண்டு வேடனுக்குப் பயந்து ஓடும் மானைப்போல, ஒரே ஓட்டமாக ஓடித் திரிசிரபுரத்தை அடைந்து மங்கம்மாளுடைய அரண்மனைக்குள்ளே பிரவேசித்தாள். அரண்மனைக் காவற்காரர்கள் இவள் யாரோ தேவியென்று அவளைத் தடுக்க மனம் வராமல், உள்ளே விட்டு விட்டார்கள்.

அவள் மங்கம்மாளுடைய கொலு மண்டபத்தை நோக்கி, "மகாராணியே அபயம் மண்டேஸ்வரியே அபயம்! மங்கையர்க்கரசியே அபயம்! உலக நாயகியே அபயம்! என்று ஓலமிட்டு சிம்மாசனத்தின் அடியிற் போய் விழுந்தாள். சில நாளாய் அன்னம் ஆகாரமில்லாதபடியாலும், நாற்காத வழியும் ஒரே ஓட்டமாய் ஓடி வந்தபடியாலும், தேக ஸ்மரணை தப்பி மூர்ச்சையாய்விட்டாள். அப்போது சிங்காசனத்தின் மேற் வீற்றிருந்த மங்கம்மாள், உடனே கீழே இறங்கி, அவளைக் கட்டித் தழுவி, அவளுடைய மூர்ச்சை தெளியும்படி சைத்தியோபசாரங்கள் செய்வித்து மூர்ச்சை தெளிந்தவுடனே அவள் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு போய்த் தன் பக்கத்தில் சிம்மாசனத்தில் இருத்தி, அவளுடைய குறையைத் தெரிவிக்கும்படி உத்தரவு செய்தாள். கற்பலங்காரி அந்தச் சிற்றரசன் செய்த கொடுமைகளை வியக்தமாக விக்ஞாபித்த உடனே மகாராணிக்குத் தன் தம்பி மேலே உக்கிர கோபாக்கினி மூண்டு, அவனையும் சாட்சி முதலானவர்களையும் உடனே கொண்டு வரும்படி, குதிரைப் பட்டாளத்தைச் சேர்ந்த நூறு போர்வீரர்களைப் புதுக்கோட்டைக்கு அனுப்பினாள். அந்தத்துஷ்ட அரசன், மங்களாகரம் பிள்ளையைக் கொல்வதற்காகக் கொலைக்களத்திலே கொண்டுபோய் வைத்துக் கொண்டு, இராணியினுடைய உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான். அந்தச் சமயத்தில் நூறு போர்வீரர்களும் போய்ச் சேர்ந்து, இராணியினுடைய உத்தரவைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டவுடனே, அந்த அரசனுக்குக் கோபமுண்டாகி, அந்தப் போர்வீரர்களின் மேல் பாய்ந்து, அவர்களில் இருவரை வெட்டிக் கொன்று விட்டான்.; மற்றவர்கள் எல்லாரும் அவனைப் பிடித்து, நிராயுதபாணி ஆக்கிப் பின்கட்டு முறையாகக் கட்டி, அவனையும் சாட்சிகள் முதலானவர்களையும் கொண்டுபோய் மகாராணி சமூகத்தில் விட்டார்கள். மகாராணி சாட்சிகளைப் பார்த்து 'மங்களாகரம் பிள்ளை கொலை செய்தது உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்க அவர்கள் தங்களுக்கு யாதொன்றும் தெரியாதென்றும், ஆனால் அரசனுடைய ஆக்கினைக்குப் பயந்து தங்களுக்குத் தெரிந்தது போல் பொய் வாக்குமூலம் எழுதி வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். உடனே இராணி தன் தம்பியைப் பார்த்து, 'நீ என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்க, அவன் சகோதரி என்கிற தைரியத்தினால், அலட்சியமாக இராணியைக்கூட மதிக்காமல் மறுமொழி சொன்னான்; மகாராணிக்கு அடங்காத கோபமுண்டாகி, கிங்கரர்களைப் பார்த்து 'இவனை நான் உன்னத ஸ்தானத்தில் வைத்திருக்க, அந்த ஸ்தானத்துக்குத் தன்னை அபாத்திரன் ஆக்கிக் கொண்டபடியால், இவனை உன்னத ஸ்தானத்தின்றே தள்ள வேண்டியது நியாயமாயிருக்கிறது. ஆகையால் இவனைத் தாயுமான ஸ்வாமி மலைச் சிகரத்தின் மேலே ஏற்றி, அங்கே இருந்து கீழே தள்ளிவிடுங்கள்' என்று உத்தரவு கொடுத்தாள். அந்தப் பிரகாரம் அவனை மலைமேல் ஏற்றித் தள்ளிவிட்டார்கள். அவனுடைய யோகமும், தேகமும், மோகமும் இவ்வகையாக ஒரு நிமிஷத்துக்குள் முடிவு பெற்றன. பிறகு மங்கம்மாள், தன்னுடைய நியாய சபையில், மங்களாகரம் பிள்ளைக்குப் பெரிய உத்தியோகம் செய்து கொடுத்து, அவனைக் குபேர சம்பத்து உடையவன் ஆக்கினாள். என்றைக்கிருந்தாலும் பரஸ்திரீ கமனஞ்செய்கிறவர்களுடைய கதி, அதோகதி என்பதற்கு அந்தக் காமியப்ப நாயக்கனே சாட்சி, கற்புள்ள ஸ்திரீகள் மேன்மை அடைவார்கள் என்பதற்குக் "கற்பலங்காரியே சாட்சி" என்று என் தாயார் சொல்லி முடித்தார்கள். இந்தச் சரித்திரத்தைக் கேட்டு, நானும் ஞானாம்பாளும் அளவற்ற வியப்பும் களிப்பும் அடைந்தோம்.

9. கருணானந்தம் பிள்ளை தன்....

9. இம்மை மறுமையைப்பற்றிய விடுகதையும், அதன் பொருளும், கருணாநந்தம் பிள்ளை தன் மகளையும் மருமகனையும் நம்பி மோசம்போன சரித்திரம்.

ஒரு நாள் எங்கள் உபாத்தியாயர் ஒரு விடுகதை சொல்லி எங்களை விடுவிக்கும்படி சொன்னார். அந்த விடுகதையின் விவரம் என்னவென்றால் :-

" இங்குண்டு அங்கில்லை; அங்குண்டு இங்கில்லை, இங்கும் உண்டு, அங்கும் உண்டு, அங்கும் இல்லை, இங்கும் இல்லை." என்பதுதான். உடனே நான் "இங்குண்டு அங்கில்லை" என்பதற்கு, ஒருவன் ஆஸ்திவந்தனாயிருந்து புண்ணியஞ் செய்யாமலிருப்பானால், அவனுக்கு இந்த உலகத்தில் மட்டும் சுகமே தவிர, அந்த உலகத்தில் சுகமில்லை என்றும், "அங்குண்டு இங்கில்லை" என்பதற்கு, ஒருவன் தரித்திரவானாயும் புண்ணியவானாயும் இருப்பானானால் அவனுக்கு மறுமையிலே சுகமே தவிர இம்மைச் சுகம் இல்லையென்றும் "இங்கும் உண்டு அங்கும் உண்டு" என்பதற்கு ஆஸ்தியும் தர்மமும், உடையவனுக்கு இகபரம் இரண்டிலும் சுகமென்றும் " இங்கும் இல்லை அங்கும் இல்லை" என்பதற்கும் செல்வமும் இல்லாமல், புண்ணியமும் இல்லாமல் இருப்பவனுக்கு இவ்வுலகத்திலும் சுகமில்லை பரலோகத்திலும் சுகமில்லை என்றும் பொருள் விடுவித்தேன்.

இதைக் கேட்டவுடனே உபாத்யாயர் என்னைப் பார்த்துச் சொல்லுகிறார்: " அந்த விடுகதைக்கு நீ சொன்ன அர்த்தம் தகுதியானதுதான். ஆனால் இதில் சில காரியங்களைக் கவனிக்க வேண்டியது முக்கியம். இகலோக சுகத்தை அனுபவிப்பதற்கு கூடச் செல்வப் பொருள்மட்டுமே போதாது. செல்வத்துடன் புண்ணியமும் சேர்ந்திருக்க வேண்டியது முக்கியம். சில ஆஸ்திவந்தர்கள், தாங்களும் அனுபவியாமல் பிறருக்கும் உபகாரஞ் செய்யாமல், பொருள்களைப் பூட்டிவைத்துக் கொண்டு லோபஞ் செய்கிறார்கள். அவர்களுக்கு இகத்திலும் பரத்திலும் என்ன பாக்கியம் உண்டு? இன்னும் சிலர் எவ்வளவு தனம் இருந்தாலும் திருப்தி அடையாமல் மேலும் மேலும் ஆசைப்பட்டு நித்திய தரித்திரர்கள்போல் துக்கத்தை அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு இவ்வுலகத்தில் என்ன சுகம் உண்டு? இன்னும் பல ஆஸ்திவந்தர்கள் பரஸ்திரீ கமனம், சூது, மதுபானம், பரஹிம்சை முதலான துர்விஷயங்களில் பொருளைச் செலவழித்துப் பலவியாதிகளையும் துன்பங்களையும், அபகீர்த்தியையும், பாவத்தையும், நரகத்தையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய தனம் அவர்களுக்குக் கேடாக முடிந்ததே தவிர, நன்மையைக் கொடுக்கவில்லை. ஆகையால் இம்மையின் சுகானுபவத்துக்குக் கூடப் புண்ணியம் அவசியமாகின்றது. ஒருவன் ஏழையாயிருந்தாலும் பொய், புரட்டு இல்லாமல் தேகப் பிரயாசைப்பட்டுத் தன்னையும் தன்னை அடுத்தவர்களையும், சம்ரக்ஷித்துத் தெய்வ பக்தியும் தர்ம சிந்தையும் உள்ளவனாயிருப்பானானால், அவனுக்கு இகத்திலும் பரத்திலும் என்ன குறை இருக்கின்றது?

தனம், உத்தியோகம், அதிகாரம் முதலிய செல்வங்கள் அற்பமாகவும், நிலை அற்றதாகவும், முன்னே நான் சொன்னபடி துன்ப ஹேதுவாகவும் இருக்கின்றன. அந்த செல்வங்களுக்கு அதிகாரிகளாலும், திருடர்களாலும், நெருப்பு முதலிய காரணங்களாலும், அனேக அபாயங்கள் உண்டு. பின்னும் வார்த்திக தசையிலும், நாம் வியாதியாயிருக்கும்போதும், அந்தச் சுகங்களை அனுபவிக்கச் சக்தியில்லாதவர்களாய்ப் போகிறோம் நாம் இறந்த பிற்பாடு அந்தச் செல்வங்கள் கூட வருகிறதுமில்லை. புண்ணியமோவென்றால் நிலைமை உள்ளதாகவும் அந்நியரால் அபகரிக்கக் கூடாததாகவும், பரலோகத்திலும் நன்மைத் தொடர்ந்துவருவதாகவும், இருக்கிறது. இந்த உலகத்திலே துன்பங்கலவாத சுகமில்லையாதலால், அந்த அற்ப சுகத்தை மதிக்காமல், புண்ணியப் பலனாகிய நித்திய சுகத்தையே நாம் தேடவேண்டும் என்கிறார்.

என்னுடைய உபாத்தியாயர் சொன்ன விடுகதையை என் தாயாருக்குத் தெரிவித்தபோது, என் தாயார் என்னைப் பார்த்துச் சொல்கிறார்:

" உன்னுடைய உபாத்தியாயராகிய கருணானந்தம் பிள்ளையைச் சாதாரண மனுஷனாக நினைக்கவேண்டாம். அவர் புத்தியிலும் நற்குணங்களிலுஞ் சிறந்தவர். அவர் பெரிய திரவியவந்தராயிராவிட்டாலும், அவர் வேண்டியமட்டில் ஒரு குறைவில்லாமல், சில நிலங்கள் வீடுகள் முதலிய ஸ்திதிகள் உடையவராயிருந்தார். அவருக்கு ஒரு பெண்ணைத்தவிர வேறு சந்ததியில்லை. அந்தப் பெண்ணை மிகவும் அன்பாக வளர்த்து அவளுக்குப் பக்குவ காலம் வந்தவுடனே ஒரு தகுந்த புருஷனைத் தேடிக் கலியாணஞ் செய்வித்தார். அவளுக்குச் சில காலத்துக்கு முன் க்ஷயரோகங்கண்டு, பிழைப்போமென்கிற நம்பிக்கையில்லாமையினால் ஒரு மரண சாஸனம் எழுதிவைத்தார். அதில் தமது சொத்துக்கள் முழுமையும் அன்று முதல் தம்முடைய மகளும், அவள் புருஷனும் அனுபவித்துக்கொண்டு தமக்கு உத்திரக்கிரியை செய்து தம்முடைய பெண்சாதியையும் சம்ரக்ஷித்துவருகிறதென்றும், சில வேளை தாமும் பிழைத்துக்கொள்கிற பட்சத்தில், தம்மையும் அவர்களை ஆதரிக்க வேண்டுமென்றும் நிபந்தனை செய்யப்பட்டது. அந்த மரணசாஸனப்படி; சகல ஸ்திதிகளும் உடனே அவருடைய மகளுக்கும் மருமகனுக்கும் ஸ்வாதீனமாகி, மிராசும் அவர்கள் பெயரால் பதிவாகி அனுபவிக்கத் தொடங்கினார்கள். பிற்பாடு தெய்வானுகூலத்தால் கருணானந்தம் பிள்ளை தேக சௌக்கியம் அடைந்து பிழைத்துக் கொண்டார். அவரையும் அவருடைய பத்தினியையும், சில நாள் மட்டும் அவர்களுடைய மகளும் மருமகனும் சம்ரக்ஷணை செய்து பிற்பாடு அவர்களை வீட்டைவிட்டு வெளிப்படும்படியான விதமாகக் கொடுமையைச்

செய்ய ஆரம்பித்தார்கள். கருணானந்தம் பிள்ளை மறுபடித் தம்முடைய சொத்தை அடைகிறதற்குப் பல பிரயத்தனங்கள் செய்தும், அவர்கள் எழுதிவைத்த மரணசாஸனமே அவருக்கு விரோதமாயிருந்ததால் அவருடைய பிரயத்தனம் பலிக்கவில்லை. அவரும் அவருடைய பத்தினியும் அன்ன வஸ்திரத்துக்கு மார்க்கமில்லாமல் மிகவுந் துன்பப்பட்டார்கள். அவர்கள் யோக்கியரென்பதும், அவர் மருமகனை நம்பி மோசம் போனதும் சகலருக்குந் தெரியுமானதால் அவருக்குப் பொருள் உதவி செய்ய வேண்டுமென்று பலர் நினைத்தார்கள். ஆனால் தேகத்தில் சக்தி உள்ளவரையில் உழைத்து ஜீவிக்கவேண்டுமே தவிர யாசகத் தொழில் ஈனத் தொழிலென்பது அவருடைய சித்தாந்தமானதால் அவர் பிறருடைய உதவியை அபேக்ஷிக்கவில்லை. என் தகப்பனாராகிய சந்திரசேகர முதலியாருக்கும் இவருக்கும் சிநேகமானபடியால் அவருக்கு சொந்தமான ஒரு வீட்டில் இவர் வாடகைக்குக் குடியிருந்து கொண்டு, அவரிடத்தில் சொற்பத்தொகை கடன் வாங்கி முதலாய் வைத்து வியாபாரஞ் செய்து காலக்ஷேபம் செய்து வந்தார்.

அவர் இழந்துபோன சொத்து, மறுபடியும் அவருக்குச் சித்திக்கும்படி உபாயஞ் செய்யவேண்டுமென்று என் தகப்பனாரும் உன் தகப்பனாரும் யோசித்துக் கொண்டு ஒருநாள் அவரை அழைத்துச் சொன்னதாவது: ஒரு பெரிய பெட்டியில் நாலாயிரம் வராகன் வைத்துப் பூட்டி, அதை உம்முடைய வீட்டில் ரகசியமாய்க் கொண்டுவந்து வைக்கிறோம். நீர் நாளையத்தினம் எங்களுக்கும் உமது மகள் மருமகன் முதலியோர்களுக்கும் விருந்து செய்வதாகச் சொல்லியனுப்பும்: உம்முடைய வீட்டில் நாங்கள் வந்து போஜனஞ் செய்து முடிந்தவுடனே நாங்கள் இருவரும் ஆளுக்கு இரண்டாயிரம் வராகன் விதம் கடன் கொடுக்கும்படி உம்மைக் கேட்கிறோம். உடனே நீர் பெட்டியைத் திறந்து எங்களுக்குக் கொடுப்பதுபோல பாவனை பண்ணி, எங்களுடைய பணத்தை எடுத்து எங்களுக்குக் கொடுத்துவிடும், அதைப்பார்த்தவுடனே, உமது மகளும் மருமகனும் உம்மிடத்தில் இன்னமும் பொருளிருப்பதாக எண்ணி, அதையும் அபகரிப்பதற்காக உம்முடைய தயவைச் சம்பாதிக்கப் பிரயாசைப்படுவார்கள், அந்தச் சமயத்தில் அவர்கள் கையிலிருக்கிற மரணசாஸனத்தை எப்படியாவது கைப்பற்றிக் கொள்ளலாம் என்றார்கள். கருணானந்தம் பிள்ளை உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என்றார். உடனே என் தகப்பனாரும், உன் தகப்பனாரும் ஒரு பெட்டியில் நாலாயிரம் வராகன் வைத்துப் பூட்டிக் கருணானந்தம் பிள்ளை குடியிருக்கிற வீட்டுக்கு ரகசியமாய் அனுப்பினார்கள். அவர் மறுநாள் தம்முடைய மகள் மருமகன் முதலானவர்கள் விருந்துக்கு வரும்படி சொல்லியனுப்பினார். அவர் விருந்து செய்வதற்கு வகையேதென்று மகளும் மருமகனும் ஆச்சரியப்பட்டுக்கொண்டு, அதையும் போய்ப் பார்க்கலாமென்று அவர் வீட்டுக்குப் போனார்கள். என் தகப்பனாரும் உன் தகப்பனாரும் விருந்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளை அனுப்பி, தங்களுடைய பரிசாரகர்களைக் கொண்டு விருந்து செய்வித்து, அவர்களும் விருந்து சாப்பிடப் போனார்கள். விருந்து முடிந்தவுடன் என் தகப்பனார் எழுந்து இரண்டாயிரம் வராகன் தமக்கு கடன்கொடுக்கவேண்டுமென்று கருணானந்தம்பிள்ளையை கேட்டார். உன் தகப்பனாரும் இரண்டாயிரம் வராகன் கடன் கேட்டார். கருணானந்தம் பிள்ளை ஒரு அறைக்குள்ளே போய்ப் பெட்டியைத் திறந்து நாலாயிரம் வராகன் எடுத்துக் கொண்டுவந்து கலகலவென்று கொட்டினார். அவர்கள் எண்ணி, ஆளுக்கு இரண்டாயிரம் வராகன் விதம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். இதைக் கண்டவுடனே மலத்தைக் கண்டு நாய்க்கு வாயூறுவது போல், கருணானந்தம் பிள்ளை மகளும் மருமகனும் வாயூறிக் கொண்டு, மலைத்து ஸ்தம்பித்துப் போயிருந்தார்கள். ஒரு நிமிஷத்தில் நாலாயிரம் வராகன் கடன் கொடுப்பாரானால் இவருடைய செல்வம் எவ்வளவு பெரியதாயிருக்க வேண்டும்? இதை நாம் அறியாமற் போய்விட்டோமே என்று பெருமூச்சுவிட ஆரம்பித்தார்கள். அந்தப் பணத்தைக் கண்டவுடனே, அவர்மேலே மகளுக்கும் மருமகனுக்கும் அத்தியந்த விசுவாசமுண்டாய்விட்டது. அவர் அந்தச் சமயத்தில் அவர்களை ஆயிரஞ் செருப்பாலே அடித்தாலும் பட்டுக்கொள்வார்கள்.

மாமனாருக்குச் சொல்லா போகும்படி மருமகன் தன் பெண்சாதிக்குக் கண்சாடை காட்டிவிட்டுப் போய்விட்டான். அவள் தகப்பனுக்குத் தூபம் போட ஆரம்பித்தாள். எப்படியென்றால் தகப்பனைப் பார்த்து ஐயாவே எங்களுடைய வாழ்வுகளெல்லாம் உங்களால் வந்த வாழ்வுதானே. நீங்கள் கிருபை செய்யாவிட்டால் நாங்கள் இந்நாள் மட்டும் ஜீவித்திருப்போமா? தாயுந் தந்தையுங் கண்கண்ட தெய்வமென்று சகல சாஸ்திரங்களுஞ் சொல்லுகின்றனவே. நீங்கள் சொல்லாமல் எங்களை விட்டுப் புறப்பட்டுவந்த நாள் முதல், எங்களுக்கு நல்ல நித்திரை இல்லை. அன்னம் ஆகாரமில்லை. எங்களை நாங்கள் மறந்தாலும் இப்போமேயல்லாமல், உங்களை மறந்த நேரமில்லை. உங்களுடைய தேகம் இளைத்திருப்பதை நான் பார்க்கும்போது, என்னுடைய மனம் பதைக்கின்றது. என்று பல வகையாகத் தப்பு ஸதோத்திரஞ் செய்தாள். இவ்வளவும் பணஞ் செய்கிற கூத்தென்று அவர் நன்றாய்த் தெரிந்துக் கொண்டு மகளைப் பார்த்து விசனப்பட வேண்டாம். அம்மா உனக்கு ஏதாவது அபேக்ஷயிருந்தால் தெரிவி, என்று நயமாய்ச் சொன்னார். அவள் உங்களுடைய மரணசாஸனத்தில், எல்லா ஸ்திதிகளையுஞ் சரியாய்க் குறிக்கவில்லையே என்றாள். அவர் ஆம் அந்த மரண சாஸனத்தைக் கொண்டுவா, என்றார். அவள் ஒரு நிமிஷத்தில் பட்சிபோற் பறந்தோடி, மரண சாஸனத்தைக் கொண்டு வந்து தகப்பனுக்குக் காட்டினாள். அவர் அதைக் கிழித்துவிடு, நான் வேறே சாஸனம் எழுதிக் கொடுக்கிறேன் என்றார். அவள் அந்தச் சீட்டையும், பிடுங்கினால் வந்த பாக்கியத்தையும் கிழித்து நாசஞ்செய்து விட்டாள். அவர் நான் சொன்னபடி எழுதி வைக்கிறேன். நீயும் உன் நாயகனும் இருட்டினவுடனே வந்து அந்தப் பெட்டியை உங்கள் வீட்டுக்குக் கொண்டு போங்கள் என்றார். உடனே அவள் கம்பீர ஜன்னி கொண்டவள் எழுந்து, புருஷனுக்குச் சந்தோஷ சமாச்சாரம் சொல்வதற்காக ஓடினாள். இருட்டினவுடனே புருஷனும் பெண்சாதியும் அந்த பெட்டியைக்

கொண்டு போவதற்காக வந்தார்கள். அது எத்தனை பேர் கூடினாலும் தூக்கக்கூடாத பளுவாயிருந்ததால், அநேகர் கூடி முக்கி முரண்டி, ஒரு வண்டியின் மேலே ஏற்றினார்கள். அந்த வீட்டுக்குக் கொண்டுபோய்ப் புருஷனும் பாரியும் பேராசையுடனே திறந்து பார்த்தார்கள். பெட்டிக்குள்ளாக மண்ணும் கல்லும் நிறைக்கப்பட்டிருந்தது. தவிர இரண்டு ஓடுகளும், இரண்டு கயிறுகளும் ஒரு காகிதத் துண்டுமிருந்தன. அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது என்னவென்றால் :—" நீங்கள் என் வாயில் மண் போட்டபடியினாலே, உங்களுடைய வாயிலே போட்டுக்கொள்ளுவதற்காகப் பெட்டியில் மண் வைத்திருக்கிறேன். நீங்கள் என்னைப் பிச்சை எடுக்கும்படி விட்டுவிட்டபடியால் நீங்கள் பிச்சை எடுக்கும்படி இரண்டு ஓடுகள் வைத்திருக்கிறேன். பிச்சை எடுக்க உங்களுக்குச் சம்மதம் இல்லாவிட்டால், நீங்கள் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு சாகும்படி கயிறும், வைத்திருக்கிறேன் " என்பதுதான். இதைப் பார்த்தவுடனே, அவர்களுடைய ஸ்திதி எப்படியிருந்திருக்கும் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா ? கருணானந்தம் பிள்ளை செய்தது, சரிசரியென்று அவர்களுடைய மனமே பறையடிக்க ஆரம்பித்தது. மரணசாஸனம் பரிகரிக்கப்பட்டுப் போனதால், என் தந்தையார் தம்முடைய ஆட்களைக் கொண்டு, பூஸ்திதிகளையெல்லாம் கருணானந்தம் பிள்ளை வசப்படுத்திவிட்டார். அவருடைய மகளுக்கும் மருமகனுக்கும் ஆதாரமாயிருந்த மரணசாஸனமே, மரணமாய்ப்போய்விட்டபடியாலும், அதிகாரிகளெல்லாம் நியாயபக்ஷத்திலே இருந்தபடியாலும், அவர்கள் மறுபடியும் அந்தச் சொத்தை அபகரிக்கிறதற்குச் செய்த பிரயத்தனங்கள், நிஷ்பலமாய்ப் போய்விட்டன. மகளும் மருமகனும் புத்திகெட்டுப் போனதற்கு இந்தச் சொத்துத்தானே காரணமாயிருந்ததென்று, கருணானந்தம் பிள்ளைக்கு வெறுப்புண்டாகி, அவர் தமது குடும்ப சம்ரக்ஷணைக்கு வேண்டிய சொற்ப ஸ்திதிகளை வைத்துக் கொண்டு, மற்ற ஸ்திதிகளையெல்லாம் பல பாகமாய்ப் பிரித்துத் தம்முடைய எளிய சுற்றத்தார் முதலானவர்களுக்குத் தானஞ் செய்துவிட்டார். அவருடைய மகளும் மருமகனும் ஏழைகளாய்ப் போனதால், அவர்களையும் தம்முடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டு ஆதரித்து வருகிறார். மனுஷ தேகம் எடுத்தவர்கள், அவர்களாற் கூடிய பரோபகாரஞ் செய்ய வேண்டுமென்றும், பரோபகாரமில்லாதவர்கள் பூமிக்குச் சுமையென்றும் நினைத்து, அவருடைய வீட்டில் தர்மப் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டு, எண்ணிக்கையில்லாத பிள்ளைகளுக்கு வித்தியா தானம் செய்து வருகின்றார். அப்படியே உனக்கும் ஞானம் பரனுக்கும் தர்மத்துக்காகக் கல்விபோதிக்கிறாரே யல்லாது யாதொரு பிரயோஜனத்துக்காக அல்ல. அவர் மகாத்மாவானதால், அவர் சொல்லுகிற ஒவ்வொரு புத்தியையும் ஒவ்வொரு மாணிக்கம்போல, உன்னுடைய மனதில் பதித்துக்கொள் " என்கிறார்கள். உபாத்தியாயர் சரித்திரத்தை நான் கேட்ட பிற்பாடு, அவரிடத்தில் எனக்கு அதிக பூஜிதையும், கௌரவமும் உண்டாகி அவருடைய வாக்கை வேதவாக்காக எண்ணி, அந்தப் பிரகாரம் அனுஷ்டிக்கத் தொடங்கினேன்.

10. கடவுளின் நித்தியத்துவம் : கல்வியின் பிரயோஜனம், கடவுளை அறிதல், அரசனுக்கும் கடவுளுக்கும் உள்ள பேதம்.

உபாத்தியாயர் ஒருநாள் எங்களுக்குப் பாடங் கொடுத்த பிறகு என்னைப் பார்த்து " கடவுளுக்கு ஒரு நிமிஷம் எப்படி " என்றார். நான் உடனே சொன்னதாவது. " ஒரு பெரிய மணல் மலை இருக்கிறது ; அந்த மலையிலிருந்து பதினாயிரம் வருஷத்துக்கு ஒரு மணல் வீதமாகக் கெட்டு, அந்த மலை முழுவதும் நாசமாவதற்கு எத்தனை காலம் செல்லுமோ, அத்தனை காலங்கூட சுவாமிக்கு ஒரு நிமிஷம் ஆகமாட்டாது " என்றேன். நான் சொன்னதை குரு அங்கீகரித்துக் கொண்டு, ஞானாம்பாளைப் பார்த்து, " நீயும் ஒரு திருஷ்டாந்தஞ் சொல்லு " என்றார். உடனே ஞானாம்பாள் " லட்சம் வருஷத்துக்கு ஒவ்வொரு துளியாக வற்றி சமுத்திரஜலம் முழுவதும் வற்றுவதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ, அவ்வளவு காலம்கூடச் சுவாமிக்கு ஒரு நிமிஷம் ஆகாது " என்றாள். உடனே உபாத்தியாயர் எங்களைப் பார்த்து " சுவாமிக்கு ஒரு நிமிஷம் அப்படியிருக்குமானால் அவருடைய நித்திய காலத்தை யார் அளவிடக் கூடும் ? நாம் புண்ணியம் செய்வோமானால் முடிவில்லாத நித்திய சுகத்தை அனுபவிக்கலாம். பாவம் செய்வோமானால் முடிவில்லாத துன்பத்தை அனுபவிக்க வேண்டும் " என்றார்.

இவ்வகையாக நானும் ஞானாம்பாளும் அவளுடைய வீட்டிலே படித்துக்கொண்டு வரும்போது, எங்களுக்கு வயது அதிகரித்ததால் இனிமேல் நாங்கள் இருவரும் ஓரிடத்தில் படிக்கக்கூடாதென்று என் தாயார் அபிப்பிராயப்பட்டு, என்னை வீட்டுக்கு வரவழைத்துக் கொண்டார்கள். அது முதல் ஞானாம்பாளைப் பார்க்கும்படியான சந்தர்ப்பம் நேரிடாதபடியால், எனக்கு மகத்தாகிய விசனகரமாயிருந்தது. எங்கள் உபாத்தியாயர் முந்தி ஞானாம்பாள் வீட்டுக்குப் போய் அவளுக்குப் பாடம் கொடுத்து பிறகு, என் வீட்டுக்கு வந்து எனக்குப் பாடம் சொல்லிக் கொண்டு வந்தார். அவர் ஞானாம்பாளைப் பார்த்து வருகிறவரானபடியால் அவருடைய முகத்தைப் பார்க்கும்போதெல்லாம், ஒருவாறு எனக்குத் திருப்தியாயிருந்தது. அவர் ஒருநாள் என்னைப் பார்த்து " ஞானாம்பாளை நல்லவள் என்று நினைத்தேன். அவள் உன் தாயாருக்கு ஒரு துரோகம் செய்துவிட்டாள் " என்றார். இதைக் கேட்டவுடனே, நான் மலைத்துப் போய்ப் பேசாமல் இருந்தேன், அவர் உடனே சிரித்துக்கொண்டு சொல்லுகிறார் ; " ஞானாம்பாள் பிறக்கிறதற்குமுன் , குணத்தில் உன் தாயாருக்குச் சமமான ஸ்திரீகள் ஒருவரும் இல்லை ; ஞானாம்பாள் பிறந்த பிற்பாடு அவள் உன் தாயாருக்குச் சமானம் என்று சொல்லும்படியாகப் பிரகாசிக்கிறாள். இதுதான் ஞானாம்பாள் செய்த துரோகம் " என்றார். இதைக் கேட்டவுனே என் கவலை தீர்ந்து அகமகிழ்ச்சி அடைந்தேன்.

இவ்வண்ணமாகச் சிலநாள் என் வீட்டில் நான் தனிமையாய்ப் படித்த பிற்பாடு, ஒருநாள் உபாத்தியாயர் என்னை நோக்கி வசனிக்கிறார் : " ஆசான் மாணாக்கனுக்கு எவ்வளவு கற்பிக்கலாமோ அவ்வளவு நான் உனக்குக் கற்பித்துவிட்டேன். இனி நீயே படித்துக் கல்வியைப் பரணம் செய்ய வேண்டும். ஆசானுடைய போதகம் முடிந்த உடனே கல்வியும் முடிந்துபோனதாகச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி எண்ணுவது தப்பு. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் பாடசாலையை விட்ட பிற்பாடு தான் படிப்பு ஆரம்பிக்கின்றது. ' பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது ' என்பது போல் பள்ளிக்கூடத்தில் படிக்கிற படிப்பை அபிவிருத்தி செய்யாவிட்டால், அந்தப் படிப்பு ஒன்றுக்கும் உதவாது. பாடசாலையிலே படிக்கிற படிப்பு அஸ்திவாரமாகவும், பாடசாலையை விட்டபிற்பாடு, தானே படிக்கிற படிப்பு மேற்கட்டடத்துக்குச் சமானமாயுமிருக்கின்றது. ஒரு ஊருக்குப் போகிற மார்க்கத்தை மட்டும் உபாத்தியாயர் போதிப்பதே அல்லாது கல்வியையே பூரணமாய்க் கற்பிப்பது சாத்தியமல்ல. உபாத்தியாயர் காட்டிய வழியைப் பிடித்துக் கொண்டு, அகோராத்திரம் படித்துக் கல்வியைப் பூர்த்தி செய்வது மாணாக்கனுக்குக் கடன். வித்தையை அபிவிருத்தி செய்யாமல் பாடசாலைப் படிப்பே போதுமென்று இருக்கிறவன், மாளிகை கட்டாமல் அஸ்திவாரமே போதுமென்று இருக்கிறவனுக்குச் சமானமாகிறான். பூட்டிவைத்திருக்கிற பொக்கிஷத்திற்குத் திறவுகோல் கொடுப்பது போல், எந்தப் புஸ்தகத்தை வாசித்தாலும், அர்த்தம் தெரிந்து கொள்ளும் படியான ஞானத்தை உனக்குப் போதித்து, வித்தியா பொக்கிஷத்தின் திறவுகோலை உன் கையிலே கொடுத்துவிட்டேன். இனிமேல் நீ உன்னுடைய முயற்சியால், அந்தப் பொக்கிஷத்தைத் திறந்து, அனுபவிக்க வேண்டுமே அல்லாது, நான் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. அரும் பதங்களுக்கு அர்த்தம் தெரிய வேண்டுமானால் , அகராதி, நிகண்டு முதலிய வியாக்கியான நூல்களும் இருக்கின்றன. திருவள்ளுவர், கம்பர் முதலிய மகாவித்துவான்கள் தங்களுடைய முயற்சியால் கவிசிரேஷ்டர்கள் ஆனார்களே தவிர, அவர்களுடைய உபாத்தியாயரிடத்தில் அவர்கள் கற்றுக்கொண்டது அற்பமாகவேயிருக்கும். அந்த வித்வான்களெல்லாம் மனுஷ பிறப்பே அல்லாமல் தெய்வீகம் அல்லவே. அவர்களைப் போல நீயும் பிரயாசப்பட்டுக் கல்வி பயின்றால், அவர்களுக்குச் சமானம் ஆவதற்கு ஆட்சேபம் என்ன ?

" கல்வியின் பிரயோஜனம் எல்லாம் கூடிக் கடவுளை அறிவதுதான் சகல சாஸ்திரங்களும், வேதங்களும், வேதாகமங்களும், சமயகோடிகளும் சொல்லுவதெல்லாம் கடவுளே அல்லாமல் வேறல்ல. கல்விமானுக்குத் தெய்வபக்தியே சிறந்த பூஷணமாயிருக்கிறது. ஒருவன் கல்விமானாயிருந்தாலும், தனவானாயிருந்தாலும்,

அவனிடத்தில் தெய்வ நேசம் இல்லாவிட்டால் அவனைப்போல் நிர்ப்பாக்கியர்கள் ஒருவருமில்லை. ஒருவன் தரித்திரனாயிருந்தாலும் பக்திமானாயிருப்பானானால், அவனைப்போல் பாக்கியசாலிகள் ஒருவருமில்லை. ஒவ்வொரு நிமிஷமும் கடவுளிடத்தில் நாம் பெற்றுக்கொள்கிற உபகாரங்களுக்குக் கணக்குண்டா? நாம் உண்பது அவருடைய அன்னம்; உடுப்பது அவருடைய வஸ்திரம்; குடிப்பது அவருடைய ஜலம்; நாம் வசிப்பது அவருடைய வீடு; சஞ்சரிப்பது அவருடைய பூமி; நாம் சுவாசிப்பது அவருடைய சுவாசம்; நாம் காண்பது அவருடைய பிரகாசம்; நாம் அனுபவிக்கிற நமது தேகமும் பஞ்சேந்திரியங்களும் ஆத்துமாவும் அவருடைய கொடை, அவருடைய கிருபை இல்லாவிட்டால், ஒரு நிமிஷம் நாம் சீவிக்கக் கூடுமா? அவர் நம்மை அசைக்காமல் நாம் அசையக்கூடுமா? அவர் நம்மை நடப்பிக்காவிட்டால் நாம் நடக்கக் கூடுமா? பூமியைப் பார்த்தாலும் ஆகாயத்தைப் பார்த்தாலும் அவருடைய உபகாரமே அன்றி வேறுண்டா? ஆகாயம் நம்மைச் சூழ்ந்திருப்பதுபோல், அவருடைய உபகாரங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. சமுத்திரத்திலே பிறந்து, சமுத்திரத்திலே வளர்ந்து, சமுத்திரத்திலே சீவிக்கிற மீன்களைப் போலக் கடவுளது கிருபாசமுத்திரத்துக்குள்ளாகவே நாம் ஜனித்து வளர்ந்து சீவிக்கிறோம்.

'' அரசனுடைய ஊழியத்திற்கும் தெய்வ ஊழியத்திற்கும் இருக்கிற பேதத்தைப் பார். அரசனுக்கு நாம் நின்று சேவிக்க வேண்டும். கடவுளைத் தியானிக்க நாம் நிற்க வேண்டுவதில்லை. நாம் பசியாயிருக்க, அரசன் உண்ணுகிறான். கடவுள் நாம் உண்ணாமல் நம்மை உண்பிக்கிறார். அரசன் தூங்கும்போது நாம் தூங்காமல் அவனைக் காக்கவேண்டும். கடவுள் நாம் தூங்காமல் நம்மைத் தூங்கவைத்துக் காவலாயிருக்கிறார். அரசன் ஓயாமல் நம்மிடத்தில் வேலை கொள்ளுகிறான். கடவுள் நம்மிடத்தில் ஒரு வேலையும் வாங்காமல், அவரே சகல வேலைகளையுஞ் செய்கிறார். அரசன் நம்மிடத்தில் வரியாசகம் செய்கிறான். கடவுள் நம்முடைய அன்பைத் தவிர வேறொன்றும் அபேக்ஷிக்கவில்லை. அரசன் அற்பக் குற்றத்தையும் சஹியான், கடவுள் நாம் தினந்தோறுஞ் செய்கிற எண்ணிறந்த குற்றங்களையும் பொறுத்துக் கொண்டு சாகிறவரையில் நம்மைத் தண்டியாமல் சகல உபகாரங்களுஞ் செய்து வருகிறார்

'' அரசன் சுயபுத்தி இல்லாதவன் என்பதற்கு அவனுடைய மந்திரிகளே சாக்ஷி. அவன் சுயசூரன் அல்ல என்பதற்கு அவனுடைய படைகளே சாக்ஷி. அவன் யாசகஸ்தன் என்பதற்கு அவன் வாங்கும் குடி இறையே சாக்ஷி அவன் நியாய பரிபாலனம் செய்யத் தெரியாதவன் என்பதற்கு அவனால் நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளே சாக்ஷி இப்படிப்பட்ட குறைவுகளில்லாமல், சர்வக்ஞத்துவமும் சர்வ சக்தியும் சர்வ சாம்பிராச்சியமும் உடைய கடவுளை எப்போதும் தியானிக்க வேண்டும். அவரைத் தியானிப்பது நமக்கே ஆத்மானந்தமாகவும், அவரைப் புகழ்வது வாய்க்கு மாதுரியமாகவும், அவருடைய நாமத்தைக் கேட்பது காதுக்கு இனிமையாயுமிருக்கின்றது '' என்று அமிர்த வருஷம் போற்பிரசங்கித்தார். அதுமுதல் உபாத்தியாயர் தினந்தோறும் வராமல் வாரத்துக்கு ஒரு முறை வந்து, எனக்குள்ள சந்தேகங்களைத் தெளிவித்துவிட்டுப் போவார். அவர் ஆஞ்ஞாபித்தபடி நான் ஒரு நிமிஷங்கூடச் சும்மா இராமல், எப்போதும், சிறந்த காலக்ஷேபஞ் செய்து வந்தேன்.

ஒரு நாள் என் தாயார் என்னிடத்தில் வந்து " ஒரு முக்கியமான விஷயத்தைக்
குறித்து உன்னிடத்திலே பேச வந்திருக்கிறேன். அந்த விஷயம் எவ்வளவு முக்கியமான
தென்று நீ தெரிந்துகொள்ளும் பொருட்டு, உனக்கு ஒரு சிறிய கதை சொல்லுகிறேன்"
என்று சொல்லத் தொடங்கினார்கள் :—

ஒரு தேசத்தை ஆண்டுவந்த அரசன் இறந்துபோன பிற்பாடு, அவனுடைய ஏக
குமாரனுக்குப் பட்டாபிஷேகமாகி அரசாக்ஷி செய்து வந்தான். அவனுடைய திரவியங்
களை எல்லாம் துர்விஷயங்களில் செலவழித்துவிட்டு அவன் மனோவியாகுலத்தோடு
கூடப் படுத்துத் தூங்கும்போது, ஒரு விருத்தாப்பியன் அவன் முன்பாகத் தோன்றி,
"உன் தகப்பனாருடைய பொக்கிஷசாலைக்குக் கீழே வெட்டிப்பார். உனக்குத் திரவியம்
அகப்படும்" என்று சொன்னதாக ஒரு சொப்பனங்கண்டு, விழித்துக்கொண்டு அந்தப்
பிரகாரம் அவன் வெட்டிப் பார்க்க, பளிங்கினால் கட்டப்பட்ட இரண்டு நில அறை
களைக் கண்டான். அந்த அறைகளில் ஒன்றில், தங்க நாணயங்கள் நிறைந்திருந்தன.
மற்றொன்றில் ஒன்பது தங்கப் பீடங்களும், அவைகளுள் எட்டுப் பீடங்களில் எட்டு வயிர
விக்கிரங்களும் இருந்தன. அந்த ஒவ்வொரு விக்கிரகமும் ஒரே வைரத்தினாலே செய்யப்
பட்டதாயிருந்தது. ஒன்பதாவது பீடத்தில், ஒன்றுமில்லாமல் வெறுமையாயிருந்தது.
அதில் அடியிற்கண்டபடி, அவன் தகப்பனால் எழுதப்பட்டிருந்தது :— "மகனே! அந்த
எட்டு வயிர விக்கிரகங்களையும் வெகு கஷ்டப்பட்டுச் சம்பாதித்தேன்; உலகத்தின்
ஒன்பதாவது விக்கிரகம் ஒன்று இருக்கின்றது: அது, எட்டு விக்கிரங்களைப்பார்க்கிலும்
ஆயிரம் பங்கு சிரேஷ்டமானது; அது உனக்கு வேண்டுமானால், கேரோ பட்டணத்
துக்குப் போய் அவ்விடத்திலிருக்கிற என்னுடைய ஊழியக்காரனைக் கண்டால், அவன்
அந்த ஒன்பதாவது விக்கிரகம் கிடைப்பதற்குத் தகுந்த மார்க்கத்தைச் சொல்லுவான்"
என்று எழுதப்பட்டிருந்தது. அந்தப் பிரகாரம், அந்த ராஜகுமாரன் கேரோ பட்டணத்
துக்குச் சென்று ஊழியக்காரனைக் கண்டு, அவன் மூலமாக ஒரு வேதாளத்தினுடைய
தயவைச் சம்பாதித்தான். அந்த வேதாளத்தைப் பார்த்து "ஒன்பதாவது விக்கிரகம்
தனக்கு கிடைக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அந்த வேதாளம் அவனைப்
பார்த்து "பதினைந்து வயதுள்ளவளாகவும் அதிரூபலாவண்ணியமும் நிர்த்தோஷமும்
உள்ளவளாயும் ஒரு பெண்ணை, எனக்கு நீ சம்பாத்தித்துக் கொடுத்தால் உனக்கு
ஒன்பதாவது விக்கிரகம் கிடைக்கும்; நீ பெண்களுடைய குணத்தை அறியும் பொருட்டு
ஒரு கண்ணாடி கொடுக்கிறேன். ஒரு பெண்ணைப் பார்த்த உடனே அந்தக் கண்ணாடி
யைப்பார். அவள் களங்கம் உள்ளவளாயிருந்தால், அந்தக் கண்ணாடியிலும் களங்கந்
தோன்றும். அவள் நிஷ்களங்கமாயிருந்தால் கண்ணாடியும் நிஷ்களங்கமாயிருக்கும்"
என்று சொல்லி ஒரு கண்ணாடியையும் அவன் கையில் கொடுத்தது. அவன் பலப்பல
ஊர்களுக்குப் போய்ப் பல பெண்களைப் பார்த்து வேதாளம் சொன்ன குணங் குறி
களின்படி ஒரு மந்திரி மகளைச் சம்பாதித்தான், அந்தப் பெண்ணைப் பார்த்த உடனே
அவனுக்கே இச்சை உண்டானபோதிலும், அந்த இச்சையை நிக்கிரகஞ் செய்து, அந்தப்
பெண்ணை வேதாளத்தின் முன்பாக கொண்டு போய்விட்டான். வேதாளத்துக்கு
அதிக சந்தோஷமுண்டாகி அந்த ராஜகுமாரனைப் பார்த்து "நீ உன் ஊருக்குப்போய்,
நில அறையைத் திறந்து பார். அங்கே ஒன்பதாவது விக்கிரகத்தைக் காண்பாய்"
என்றது. அவன் "அந்தப் பெண்ணை இழந்துவிட்டோமோ" என்கிற துக்கத்துடன்
ஊருக்குப் புறப்பட்டுப்போய், நில அறையைத் திறந்து பார்த்தான். ஒன்பதாவது பீடத்
தில் ஜகஜ்ஜோதியாக ஒரு விக்கிரகம் இருந்தது. அதை நெருங்கிப் பார்க்க, இவன்
வேதாளத்துக்குச் சம்பாதித்துக்கொடுத்த பெண்ணாயிருந்தது. உடனே அந்த வேதாள
மும் ஆகாச மார்க்கமாய் வந்து "அந்தப் பெண்தான் ஒன்பதாவது விக்கிரகம். அவளை
நீ விவாகஞ் செய்து கொண்டு சுகமாக வாழ்" என்று சொல்லி மறைந்து போய்விட்டது;
அவன் பரமசந்தோஷம் அடைந்து, அந்த ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டு சேக்ஷம
மாயிருந்தான்.

அந்தக் கதையில் சொல்லிய பிரகாரம் ஒருவனுக்கு உத்தமகுணமுள்ள பாரி வாய்ப்
பாளானால், அதற்குச் சமானமான செல்வம் வேறொன்றுமில்லை. ஞானாம்பாளை அந்த
ஒன்பதாவது விக்கிரகமென்றே சொல்லலாம். அவளை உனக்கு விவாகம் செய்யும்படி
சம்பந்தி முதலியாரைக் கேட்க யோசித்திருக்கிறோம். உன்னுடைய அபிப்பிராயம்
என்ன? என்று என் தாயார் கேட்டார்கள். இதைக் கேட்டவுடனே என் உள்ளத்தில்
ஆனந்தம் பொங்கிக் கண் வழியாய்ப் புறப்பட்டு முகத்திற் பரவிற்று. நான் உடனே
என் தாயாரைப் பார்த்து "ஞானாம்பாளைக் கொள்ள எனக்கு ஆக்ஷேபமில்லை.
நீங்கள் அந்தக் கதையை ஒன்பது விக்கிரகங்களோடே முடித்துவிட்டது ஒரு குறைவா
யிருக்கிறது. அந்த ஒன்பது விக்கிரகங்களுக்கும் ஆயிரம் பங்கு மேலாகப் பத்தாவது
விக்கிரகம் ஒன்று இருக்கிறது. அதையும் கூடச் சேர்த்துவிட்டால், அந்தக் கதை பூரண
மாகும்" என்றேன். நான் யாரைக் குறிப்பிட்டுப் பேசினேனென்று என் தாயார் அறிந்து
கொண்டு, அந்த ஸ்தோத்திரத்தைக் கேட்க இஷ்டமில்லாமல் போய் விட்டார்கள்
நான் சொன்ன பத்தாவது விக்கிரகம் யாரென்றால் என்னுடைய தாயார்தான்.

12. விவாகம் பேசல், சம்பந்திகளின் சம்வாதம் குலத்திலுந் தலத்திலுங் குணமே விசேடம். காந்தர்வ விவாக கண்டனம்.

என்னுடைய சம்மதத்தை என் தாயார் என் தகப்பனாருக்குத் தெரிவித்தவுடனே என் தகப்பனார் சம்பந்தி முதலியார் வீட்டுக்குப்போய், ஞானாம்பாளை எனக்குக் கன்னிகாதானஞ் செய்யவேண்டுமென்று கிரமப்படி கேட்டார். அதற்குச் சம்பந்தி முதலியார் யாதொரு ஆக்ஷேபமுஞ் சொல்லாமல் உடனே சம்மதித்தார். பிற்பாடு நிச்சிய தாம்பூலம் மாற்றுவதற்காக பந்துக்கள், இஷ்டமித்திரர்களுக்கெல்லாம் தாம் பூலம் அனுப்பி, அவர்கள் எல்லாரும் சம்பந்தி முதலியார் வீட்டில் வந்து கூடினார்கள். நிச்சிய தாம்பூலம் மாற்றுவதற்கு முன் சம்பந்தி முதலியார் என் பிதாவை நோக்கி ''கலியாணத்துக்குப் பின்பு மாப்பிள்ளையும் பெண்ணும் யார் வீட்டில் இருக்கிறது'' என்று கேட்டார். உடனே என் தகப்பனார் ''இந்த விஷயத்தில் உமக்கென்ன சந் தேகம் வந்தது? மாடு 'தேய்க்கிறவன்கூட மாமனார் வீட்டில் இருக்க மாட்டானே? என் பிள்ளை உம்முடைய வீட்டில் இருப்பானா?'' என்றார். ''அப்படியானால் பெண் கொடுக்கச் சம்மதமில்லை'' யென்று சம்பந்தி முதலியார் சொன்னார். ''என் பிள்ளைக் குப் பெண் பஞ்சமா? உன் பெண் வேண்டியதில்லை'' என்று என் பிதா மொழிந்தார். சம்பந்தி முதலியார் அவர் பாட்டன் காலமுதற் பிரபுவாகவும், என் தகப்பனார் அவருடைய தகப்பன் காலமுதற்பிரபுவாகவும் இருந்தபடியால், சம்பந்தி முதலியார் தம்மை ஒருபடி உயர்ந்தவராக எண்ணிக்கொண்டு, என் தகப்பனாரைப் பார்த்து ''உன் பூர்வோத்தரம் தெரியாதா? உன் தகப்பனுடைய நாள் முதல்தானே நீ பிரபு; அதற்கு முன் உனக்கு ஜாதியேது?'' என்று தூஷித்தார். அவரை என் தகப்பனார் ''நீ அம்பட்டன் கோத்திரம் அல்லவா?'' என்றார். இவரை அவர் ''நீ வண்ணான் கோத்திரம் அல்லவா?'' என்றார். இப்படியாக ''அம்பட்டன் குப்பையைக் கிளறினால் அத்தனையும் மயிர்'' என்பதுபோல் இவர்களுடைய சம்வாதத்தால் மறைந்து கிடந்த எங்கள் பூர்வோத்தரங்களெல்லாம் வெளியாகிவிட்டன.

அப்போது எங்கள் பந்துக்களில் ஒரு விருத்தர் கூட இருந்தார். அவர் யதார்த்த வாதி. அவர் தகப்பன், பாட்டன் காலத்தில் ஒன்றுமில்லாமல் இருந்து தன் காலத்தில் பிரபுவானவர். என் தகப்பனாரும் சம்பந்தி முதலியாரும் தகப்பனார் பாட்டனார் காலத்துப் பிரபுத்துவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டபோது, அந்தக் கிழவனாருக்குக் கோபம் அதிகரித்து அவர்களை நோக்கிச் சொல்லுகிறார்; ''நீங்கள் இருவரும் பிரபுக்கள் அல்ல. நான்தான் பிரபு. எவன் பிரபுத்துவத்தைத் தானே சம்பாதிக்கிறா னோ, அவன் பெரியவனேயல்லாமல், தகப்பன் பாட்டனிடத்திலிருந்து பிரபுத்து வத்தைச் சுதந்தரிக்கிறவன் எப்படிப் பிரபு ஆவான்? எவன் சுத்தவீரனோ அவனுக்குப் பெருமையேயல்லாது அப்பன் பாட்டன் சுத்த வீரர்களாயிருந்ததைக் கொண்டு ஒரு பேடிக்குப் பெருமை உண்டாகுமா? எவன் வித்வானோ அவனுக்கு மகிமையேயல்லாமல், அவன் பிள்ளை மூடனாயிருந்தால் அவனுக்கு வித்வான் என்கிற பட்டம் கிடைக்குமா? உங்கள் பாட்டனார் சம்பாதித்த ஆஸ்தி போய்விட்டால், ஒரு காசு முதலாய்ச் சம் பாதிக்க உங்களுக்குத் திறமையுண்டா? வித்தையும் புத்தியும் குணமும் உள்ளவன் உயர்ந்தவனே தவிர அத்தன்மையில்லாதவன் தன்னை உயர்ந்தவனென்று சொல்லிக் கொள்வது எப்படியென்றால் தூக்குண்ணும்படி தீர்மானிக்கப்பட்ட ஒரு கொலைக்காரன் தூக்கு மரத்தின்மேல் நின்றுகொண்டு, தான் எல்லாரிலும் உயர்ந்தவனென்று சொல் வதற்குச் சமானம்'' என்று அந்தக் கிழவனார் ஒரு பக்கத்தில் குறுக்கேயிறங்கிப் பேசத் தலைப்பட்டார். சம்பந்திகள் இருவரும் மரியாதைப்பன்மை போய், அவமரி யாதைக்குரிய ஒருமையிலும் டகரப் பிரயோகங்களிலும் வாய்ச்சண்டையிலிருந்து கைச்சண்டையிலும் பிரவேசித்தார்கள். கைச்சண்டையிலிருந்து கத்திச் சண்டையில் பிரவேசிக்க யத்தனமாயிருந்தபோது, கூடியிருந்த பந்துக்கள் நயமான வார்த்தைகளைச் சொல்லி விலக்கிவிட்டார்கள். கடைசியில் சம்பந்தி முதலியார் ''என் மகளை ஒரு நாய்க்குக் கொடுத்தாலும் கொடுப்பேனேயல்லாது உன் மகனுக்குக் கொடுக்கிறதில்லை'' என்று சபதங் கூறினார். என் தகப்பனார் ''என் மகனுக்கு ஒரு கழுதையைக் கொண் டாலும் கொள்ளுவேனேயன்றி, உன் மகளைக் கொள்ளுகிறதில்லை'' என்று மார்பு தட்டிக் கொண்டு வந்துவிட்டார். இவ்வகையாக எங்களுடைய கலியாணம் நாய்ச் சம்பந்தத் திலும் கழுதைச் சம்பந்தத்திலும் முடிந்தது.

அன்று முதல் சம்பந்தி முதலியாருக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லா மற் போய்விட்டது. அவர்கள் வீட்டுக்கு நாங்கள் போகிறதுமில்லை; எங்கள் வீட்டுக்கு அவர்கள் வருகிறதுமில்லை. அவர்களுடைய சிநேகிதர்கள் எங்களுக்கு விரோதிகள். அவர்களுடைய பகைவர்கள் எங்களுக்கு இஷ்டர்கள் அவர்களுடைய வேலைக்காரர் களுக்கும் எங்கள் வேலைக்காரர்களுக்கும் பகை. அவர்களுடைய ஆடு மாடுகளுக்கும் எங்களுடைய ஆடு மாடுகளுக்கும் பகை. இப்படிப் பிரமாதமாகக் கலகம் மூண்டுவிட்டது. ஆனால் இந்தக் கலகத்தில் நானும் ஞானம்பாளும், என் தாயாரும் அவள் தாயாரும், இந்த நாலு பேர் மட்டும் சம்பந்தப்படவில்லை. எங்கள் தாய்மார்கள் தங்கள் கணவர் களைச் சமாதானப்படுத்தக் கூடியவரையில் முயன்றும் பயன்படவில்லை.

சம்பந்தி முதலியார் தம்முடைய சபதத்தை நிறைவேற்றும் பொருட்டு பல ஊர்களுக்குக் கடிதம் அனுப்பி தன் மகளுக்கு மாப்பிள்ளை விசாரிக்க ஆரம்பித்தார். அதை கேட்டு என் தகப்பனாரும் பல ஊர்களுக்குக் கடிதம் போட்டு, எனக்குப் பெண் விசாரிக்கத் தொடங்கினார். ஞானாம்பாளைத் தவிர, வேறே தேவ ஸ்திரியாயிருந்தாலும் விவாகஞ் செய்கிறதில்லையென்றும், என் தகப்பனாருடைய பிரயத்தனங்களுக்கு இடங்கொடுக்கிறதில்லையென்றும், எனக்குள்ளே நிச்சயித்துக்கொண்டேன். ஆனால் ஞானாம்பாள் ஸ்திரீ வேறு ஜாதி ஆனதால் அவளுடைய தகப்பனார் அவளுக்கு வேறே புருஷனைத் தேடி, பலவந்தமாய்க் கலியாணம் செய்துவிட்டால் என்ன செய்கிறதென்கிற கவலை என்னை வாதித்தபடியால், அவளை ரகசியத்தில் எங்கேயாவது அழைத்துக்கொண்டுபோய் விவாகம் செய்துகொண்டு திரும்பிவருகிறதென்று தீர்மானித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை அவளுக்கு கடிதம் மூலமாகத் தெரிவித்தேன். நான் எங்கே கூப்பிட்டாலும், அவள் சந்தோஷமாய் வருவாளென்றும் யாதொரு ஆக்ஷேபமும் சொல்லமாட்டாளென்றும் நம்பி இந்த கடிதத்தை அனுப்பினேன். ஆனால் அவளுடைய மறுமொழியைப் பார்த்த உடனே என்னுடைய ஆசை நிராசையாய்ப் போய்விட்டது. அந்த மறுமொழி வருமாறு.

என் பிரியமான அத்தான்,

தாங்கள் அனுப்பிய கடிதத்தை வாசித்துப் பார்த்துத் துக்க சாகரத்தில் முழுகினேன். தாங்கள் எனக்கு எழுதிய கடிதம் போல், ஒரு தாசிக்குக்கூட ஒருவரும் எழுத துணியார்கள் என்னிடத்தில் என்ன துர்மார்க்கத்தைக் கண்டு அப்படிப்பட்ட கடிதத்தை எனக்கு எழுதினீர்கள் நாம் இருவரும் எங்கேயாவது போய், அந்தரங்கத்தில் கல்யாணத்தை முடித்துக்கொள்ளலாமென்று எழுதி இருக்கிறீர்கள். விவாகம் இல்லாத ஒரு கன்னிகையும் பிரமசாரியும் சேர்ந்துகொண்டு வெளிப்படுவதினால் உண்டாகிற அவமானமும், அபவாதமும், உலகமுள்ளவரையில் நீங்குமா? என்னை இந்த அவமானத்துக்கு உட்படுத்த, நான் உங்களுக்கு என்ன துரோகம் செய்தேன்? இந்த விஷயத்தில் புருஷர்களுக்குண்டாகிற அபவாதத்தைப் பார்க்கிலும், ஸ்திரிகளுக்குண்டாகிற அபவாதம் நூறு பாங்கு பெரிதென்று தாங்கள் ஏன் யோசிக்கவில்லை? ஐரோப்பியர்களுக்குள்ளே நடக்கிற காந்தர்வ விவாகத்தைப் புகழ்ந்து பேசுகிறீர்கள். அவர்களுக்குள்ளே பெண்ணுக்கும் புருஷனுக்கும் வயது முதிர்ந்த பின்பு விவாகம் நடப்பதுந் தவிர விவாகத்துக்கு முன்பு அவர்கள் ஒருவரை ஒருவர் அந்தரங்கத்தில் சந்திப்பதும், சம்பாஷிப்பதும் வழக்கமாயிருக்கிறது. ஸ்திரி புருஷர்கள் ஒருவரை ஒருவர் பாராமலே அதிபால்யத்தில்கலியாணம் நடக்கிற வழக்கமுள்ள இத்தேசத்துக்குக் கந்தர்வ விவாகம் தகுதியா? விவாகத்துக்குமுன் ஸ்திரி புருஷர்களுக்குள் நடக்கிற அந்தரங்க சல்லாபத்தினால் விளைகிற தீமைகளைக் குறித்து, ஐரோப்பியர்களே முறையிடுகிறது. தவிர நியாயஸ்தலங்களில் வரும் வழக்குகளிலும் அந்தத் தீமைகள் இன்னவையென்று நாம் அறிகிறோமல்லவா? அந்தத் துர்வழக்கத்தை இத்தேசத்துக்குக் கொண்டுவர யாராவது முயற்சி செய்வார்களானால் அவர்கள் தேசாபிமானிகள் அல்லவென்பது ஸ்பஷ்டம். பெரும்பாலும் தாய் தந்தைமார்கள், தங்களுடைய பிள்ளைகளின் நலத்தையே கருதுவர்கள். ஆகையால், தாய் தகப்பன்மார்களுடைய அபிப்பிராயப்படி நடப்பது உசிதமாயிருக்கின்றது. ஆனால் ஆடு மாடுகளுடைய சம்மதத்தைக்கேளாமல் அவைகளை விலை கூறுவதுபோல், தகுந்த வயது உள்ள பிள்ளைகளுடைய இஷ்டத்தை எவ்வளவும் மதியாமல் தாய் தந்தைமார்கள் தங்கள் இஷ்டப்படி நடத்த முயலுவார்களானால், அப்படிப்பட்ட விவாகத்துக்குச் சம்மதிக்கமால், நிராகரிக்கப் பிள்ளைகளுக்குப் பூரண சுதந்திரம் உண்டாயிருக்கின்றது. தங்களுக்குக் கன்னிகையாகிய நான் கடிதம் எழுதுவது அநுசிதமாயிருந்தாலும், என்னுடைய அபிப்பிராயம் தெரியும்பொருட்டு இந்த ஒரு கடிதம் மட்டும் எழுதினேன். இனிமேல் எழுதமாட்டேன். தாங்கள் ஒருதரம் எனக்குச் செய்த உபகாரத்தையும் மறவேன்.

இங்ஙனம்,
தங்கள் விதேயை
ஞானாம்பாள்.

இந்த கடிதத்தைப் பார்த்தவுடன், என்னுடைய புஸ்தி எந்த ஸ்திதியில் இருந்திருக்குமென்று நீங்களே உணர்ந்துகொள்ளுங்கள். இந்த கடிதத்தைத் திருப்பித் திருப்பி ஆயிரந்தரம் படித்தேன். நான் என்னுடைய கடிதத்தை எவ்வளவு நம்பிக்கையோடுகூட எழுதியிருந்தேனோ, அவ்வளவுக்கு அவளுடைய மறுமொழி முழுதும் பிரதிகூலமாயிருந்தது என்னை விவாகஞ்செய்துகொள்ள அவள் சம்மதம் உள்ளவளென்பதும்கூடச் சந்தேகத்தில் வந்துவிட்டது. ஆனால், தகுந்த பிராயமுள்ள பிள்ளைகளுடைய இஷ்டத்தைத் தாய் தகப்பன்மார்கள் எவ்வளவும் கவனிக்காவிட்டால், அப்படிப்பட்ட விவாகத்தைப் பிள்ளைகள் நிராகரிக்கலாமென்று அவள் எழுதிய ஒரு வாக்கியமட்டும், கொஞ்சம் நம்பிக்கைக்கு ஆஸ்பதமாயிருந்தது. தண்ணீரில் விழுந்து தத்தளிக்கிறவர்கள் ஒரு துரும்பு அகப்பட்டாலும் அதைப்பிடிப்பதுபோல நான் அந்த அற்ப நம்பிக்கையைக் கொண்டு என் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். அவளுடைய கடிதத்தின் முதற்பாகங்கள் கோபமாயிருந்தாலும் "நீங்கள் செய்த உபகாரத்தை மறவேன்" என்கிற கடைசி வாக்கியத்தைக்கொண்டு அவள் கோபந்தணிந்துவிட்டதாக நிச்சயித்துக்கொண்டேன்.

தொடரும்...

துறைச் செய்திகள்.

1-9-90 முதல் 30-12-90 முடிய உள்ள காலத்திற்கான துறை செய்தி

கடலூர் மாவட்ட ஆவணக் காப்பகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய திரு. எஸ். சந்தானகோபாலன் உதவியாளராக பதவி உயர்வு பெற்று, தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னையில் 12-11-90 அன்று பணியேற்பு செய்தார்.

1.1.90 முதல் 31.3-91 முடிய உள்ள காலத்திற்கான துறை செய்திகள்

1. 1990–91ஆம் ஆண்டிற்கு பின்வரும் நபர்கள் உதவி ஆணையராகத் தற்காலிக நியமனம் செய்து அரசு தமது அரசாணை நிலை எண் 328, கல்வி (டபிள்யூ-1), நாள் : 19—3—1991-ல் ஆணை வெளியிட்டுள்ளது.

1. திருமதி எச். அம்மணி .. .. ஆராய்ச்சி அலுவலர் மாவட்ட ஆவணக் காப்பகம், கோவை.

2. திரு. வி. இராமகிருஷ்ணன் ... — கண்காணிப்பாளர் (நிலை-ஏ), தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை-8.

3. திரு. வி. விஜேந்திரன் ... ... கண்காணிப்பாளர் (நிலை-ஏ) தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை-8.

2. அரசாணை வாலாயம் எண் 871 பொது, (ஸ்பெஷல் எ) துறை, நாள் 16—3—1991–க் கிணங்க, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி இயக்குநராக 25—3—1991-ல் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மாவட்ட ஆவணக் காப்பகம், மதுரை-2

1—10—1990 முதல் 31—12—1990 வரையிலான காலத்தில் மதுரை மாவட்ட ஆவணக் காப்பகத்தில் பின்குறிப்பிடப்படும் அலுவலகங்களிலிருந்து வரலாறு மற்றும் நிர்வாக முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் மையப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர் எண்.	அலுவலகப் பெயர்.	ஆவணங்களின் வருடம்.	நி. மு. ஆவணங் களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(3)
1	அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் —	1959	5
2	பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகம் ... —	1959	29
3.	போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகம் — ..	1959	6
4.	உசிலம்பட்டி. வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்	1959	159
5.	சின்னமனூர் நகராட்சி அலுவலகம் — —	1939 முதல் 1960 வரை.	10
			209

இதுவரை இக்காப்பகத்திற்கு மாற்றப்பட்டுள்ள ஆவணங்களில் 14 அலுவலகங்களின் ஆவணங்களுக்குப் பொருள் விவர அட்டவணைகள் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ள பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

3. மதுரை மாவட்டத்திலுள்ள ஏழு நகராட்சி அலுவலகங்கள் மற்றும் மதுரை மாநகராட்சி அலுவலகம் ஆகியவை பார்வையிடப்பட்டு தேவையான விவரங்கள் சேகரிக்கபட்டு 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் மையப்படுத்தும் பணி துவங்கப்பட்து.

4. 10—12—1990 அன்று காந்திகிராம ரூரல் இன்ஸ்டிடியூட் நூலகம் பணியாளர்கள் மற்றும் மாணர்வகள் மொத்தம் 16 பேர் இக்காப்பகத்தைப் பார்வையிட்டனர்.

மாவட்ட ஆவணக் காப்பகம், திருச்சி-20.

அரசாணை நிலை எண் 1053, கல்வி, நாள் 5—9—1985-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி மாவட்ட ஆவணக் காப்பகம் 27—2—1986 அன்று உதவி ஆணையர் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டன. இம்மாவட்ட ஆவணக்காப்பகம் முதலில் மாவட்ட அலுவலக வளாகத்திலும் பின்னர் 16—7—1986 முதல் எண் 9, காஜாநகர், மன்னார்புரம், திருச்சி-20-ல் உள்ள தனியார் கட்டிடத்திலும் தற்போது 21—10—1989 முதல் 15, சேதுராம் பிள்ளை காலனி, போல்கேட், திருச்சி-20-ல் உள்ள தனியார் கட்டிடத்திலும் இயங்கி வருகிறது. இம்மாவட்ட ஆவணக் காப்பகத்திற்கென நிரந்தரமான கட்டடம் கட்டுவதற்காக திருச்சி மாவட்டத்தில் உள்ள நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்ட ஆவணக் காப்பகத்தில் ஆவணங்கள் சேகரிக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள மொத்தம் 409 அலுவலகங்களில் இதுவரை 98 அலுவலகங்களில் ஆவணங்கள் இருப்பில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளவ. இதுவரை நிலை முடிவு ஆவணங்கள் 64294 எண்ணிக்கையும் புத்தகங்கள் 1773 எண்ணிக்கையும் பெறப்பட்டுள்ளன. பெறப்படும் ஆவணங்களுக்கு அவ்வப்போது அட்டவணைச் சீட்டுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மேற்படி ஆவணங்கள் 151 கட்டுகள் பெறப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை திருச்சி மற்றும் ஸ்ரீரங்கத்திலிருந்தும் மாவட்ட ஆட்சியரகம், வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ள ஆவணங்கள் இம்மாவட்டத்தில் வரலாறு பற்றி எழுதும் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரிதும் உதவும். தனியார் வசமுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் மற்றும் கிறித்துவ தேவாலய ஆவணங்கள் ஆகியவற்றைப் பற்றி அறியவும், பாதுகாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

29—6—1989 நாளிட்ட தினமணி நாளிதழில் வெளியான செய்தியின் அடிப்படையில் தஞ்சை வைத்தீஸ்வரன் கோவில் நூலகத்தில் உள்ள பழம் பெரும் ஏட்டுச்சுவடிகள் பற்றிய விவரங்களை தலைமை அலுவலகத்திற்கு அளிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

26—7—1989 நாளிட்ட ''ஜூனியர் விகடன்'' பக்கம் 25-27-ல் வெளியான செய்தியின் அடிப்படையில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா வத்திராயிருப்பிலுள்ள தியாகி எஸ். கே. பொன்னையாத் தேவர் வசமுள்ள ''நல்லதங்கள்'' பற்றிய ஆவணங்கள் மற்றும் அரிய ஓலைச்சுவடிகள் பற்றிய விவரங்கள் அளிக்க கோரப்பட்டதில் தன்வசமுள்ள ஓலைச்சுவடிகள் திருநெல்வேலி தொல்பொருள் அலுவலருடன் தொடர்பு கொண்டதில் ஓலைச் சுவடிகளின் முழுமையான அறிக்கை அவர்களின் துறைத் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதும் அவற்றினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிப்பதுடன் துறையின் இயக்குநர் செயலகத்துடன் தொடர்பு கொண்டு ஓலைச்சுவடிகளின் பிரதியினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 1062, கல்வித் துறை, நாள் 25—7—1990-ன்படி இம்மாவட்ட ஆவணக்காப்பகத்தின் உதவி ஆணையர் அவர்கள் திருச்சி மண்டல சரித்திரகால ஆவண ஆய்வுக்குழுவில் உறுப்பினர்-செயலராக நியமனம் செய்யப்பட்டு திருச்சி மண்டல ஆவண ஆய்வுக்குழு உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வருகின்றார்.

தனியார் ஆவணங்கள் சேகரிதல் சம்பந்தமாக மேற்காணும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

23—3—1989 நாளிட்ட தினமலர் நாளிதழ் பக்கம் 5-ல் வெளியான செய்தியின் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், மேலப்பனையூரில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர் திரு. கரு. ராஜேந்திரன் அவர்களிடம் 1885ஆம் ஆண்டைச்சார்ந்த ஓலைச் சுவடிகள் கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேடுகள் நூறாண்டுகளுக்கு முன் புதுகை தனியரசின் பிரதிநிதியாக இருந்த ''பிளாக்பன்'' என்ற ஆங்கிலேயர் புதுக்கோட்டை மன்னருக்கு எழுதிய சில கடிதங்கள் போன்ற வரலாற்று சிறப்புமிக்க அரிய ஆவணங்கள் உள்ளன. அவற்றை ஆய்வு செய்து அவரிடம் இருந்தும் ஆவணங்களின் நகல்கள் பெறப்பட்டது. இவ்வலுவலகத்தின் ஆய்விற்கும் ஆணைக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

மாவட்ட ஆவணக் காப்பகம், கோவை

1—10—1990 முதல் 31—12—1990 வரையிலான சாதனைகள் பற்றிய காலாண்டு அறிக்கை.

வரிசை எண்.	அலுவலகங்களின் பெயர்.	பெறப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	ஆணையாளர், மாநகராட்சி அலுவலகம், கோவை.	3,857
2.	வட்டாட்சியர், பொள்ளாச்சி	240
	மொத்தம் ...	4,097

Essays on topics of
Social Sciences, Archives and
matters of general interest are
welcome in English or Tamil, for
Publication in AVANA AMUDHAM
subject to the Editor's discretion.

Research thesis or books may
be sent to the Commissioner
of Archives, Tamil Nadu
Archives, Madras-600 008, for
reviews to be included in the
Journal.

The Tamil Nadu Archives
does not, however, accept any
responsibility for the views
expressed by the authors
in their essays, etc.

GOVERNMENT CENTRAL PRESS, MADRAS-600 079.